


*உண்மைதானா? இல்லை வதந்தியா? தோழி விகசிதா பொய் சொல்பவள் அல்ல. தன்னை நன்கு அறிந்தவள். தோழி கூட அல்ல அவள். தங்கை போல் பழகுபவள். அதனால்தானே ஓடோடி வந்து மூச்சு வாங்க இந்தச் செய்தியைச் சொல்கிறாள்.*

*பரபரப்போடு உப்பரிகை நோக்கிச் சென்ற ராணி யசோதரா கீழே ராஜவீதியைப் பார்த்தாள். மக்கள் தங்கள் பழைய இளவரசரைப் பார்க்கும் ஆவலோடு, அவர் வரும் திசை நோக்கித் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தார்கள்.*

*''இந்தக் கபிலவாஸ்துவுக்கு மறுபடி வர எப்படி அவர் சம்மதித்தாராம்? தந்தையும் மனைவியும் மகனும் நாடும் வேண்டாம் என்று துறந்து போனவர் தானே?''*

*''ஆம் அம்மா. ஆனால் கானகத்தில் அவரைச் சந்தித்த நம் தேரோட்டி சந்தகன் கேட்ட கேள்விகள் அவர் மனத்தை மாற்றிவிட்டது!''*

*''அப்படி என்ன கேட்டான் அவன்?''*

*''நீங்கள் குடும்பத்தைத் துறந்தது மக்கள் குலம் முழுவதையும் நேசிக்கத்தானே? பழைய நாட்டு மக்களும் பூர்வாசிரம மனைவியும் மகனும் தந்தையுமெல்லாம் அந்த மக்கள் குலத்தில் அடங்குபவர்கள் தானே? அவர்கள் உங்களின் சிறப்பு நேசத்திற்கு ஆட்படக் கூடாதென்றாலும், பொது நேசத்திற்கு உட்பட்டவர்கள் தானே? அப்படியானால், பல நாடு போகும் நீங்கள் கபிலவாஸ்துவுக்கும் ஏன் வரக்கூடாது? உங்களின் பழைய நாட்டு மக்களுக்கு உபதேசங்களை ஏன் வழங்கக் கூடாது? இவைதான் அம்மா அவன் கேட்ட கேள்விகள். உங்கள் கணவர் மறுப்பே சொல்லவில்லையாம். அதற்கென்ன, வருகிறேன் என்றாராம், இதோ வந்து கொண்டிருக்கிறார்!''*

*யசோதராவின் உள்ளம் பரபரப்படைந்தது. எத்தனை ஆண்டுகள் ஓடிவிட்டன! அன்று மகன் ராகுலன் சிறு குழந்தை. இன்றோ வளர்ந்த வாலிபன். தந்தைப் பாசமின்றி வளர்ந்த மகன். அவன் நினைவில் தந்தையின் முகமே நழுவியிருக்கும். இன்றுதான் தந்தையைப் புதிதாய்ப் பார்ப்பது போல் பார்ப்பான்.*

*அவர் மட்டுமா துறவியானார்? நானும்தான் துறவினி போல் வாழ்கிறேன், லட்சுமணனைப் பிரிந்த ஊர்மிளை மாதிரி!*

*''அடியே விகசிதா! ராஜகுமாரன் ராகுலனையும் என் மாமனார் சுத்தோதனரையும் விரைந்து வரச்சொல். நானும் தயாராகிறேன். அவரை நாமே சென்று எதிர்கொண்டு அழைப்பதுதான் மரியாதை!''*

*விகசிதா ஆகட்டும் அம்மா என்றவாறு அவர்களை அழைக்க ஓடினாள்.*

*யோசனையுடன் நிலைக்கண்ணாடி முன் சற்று நேரம் நின்ற யசோதரா, ஒரு பட்டுப் புடவையை எடுத்து உடுத்திக் கொண்டாள். அனைத்து ஆபரணங்களையும் அணிந்து அலங்கரித்துக் கொண்டாள். தன் அழகால் கவரப்பட்டு, அவர் துறவறம் துறந்து மறுபடி இல்லறம் ஏற்க மாட்டாரா? ஓர் ஏக்கம் பெருமூச்சாய் அவளிடம் புறப்பட்டது. பல இரவுகள் அவளிடமிருந்து எழுந்த பெருமூச்சின் தொடர்ச்சி அது.*

*அந்த நாள் இப்போதும் நினைவில் தோன்றி அவளைப் பதற வைத்தது. இதோ தன் வாதத் திறனால் கபிலவாஸ்துவுக்கு அவரை இன்று வரவழைத்திருக்கும் இதே தேரோட்டி சந்தகன்தான், பதினைந்து ஆண்டுகளுக்கு முன், இளவரசர் தான் துறவு மேற் கொள்ள முடிவு செய்து கானகத்திற்குள், போனதையும், அதற்குச் சாட்சியாக மன்னரின் தலைக் கூந்தலை ஒரு தட்டில் ஏந்தி வந்து*

காட்டினான்.

விவரமறிந்து பதறியவாறு ஓடோடி வந்தார் மாமனார் சுத்தோதனர்.

‘மகளே! உனக்கு என்ன ஆறுதல் கூறுவதென்று தெரியவில்லை அம்மா. பிறந்த வீடு செல்வது ஆறுதல் அளிக்கும் என்றால் அப்படியே செய். பேரன் ராகுலனை அவ்வப்போது வந்து நான் பார்த்துக் கொள்கிறேன்''

தேற்றப்பட வேண்டியவர் அவளைத் தேற்றினார். அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். இதுவே என் வீடு. தாங்களே என் தந்தை. நான் இங்கே வாழ்வதையே விரும்புகிறேன்.''

அன்று முதல் இன்றுவரை அவளை மகளாய்த்தான் கருதுகிறார். எதிலும் அவள் வைத்ததே சட்டம். அவளைக் கேட்காமல் நாட்டில் ஒன்றும் நடப்பதில்லை. அவருக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது. விரைவில் பேரன் ராகுலனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய வேண்டும் என்பதே அவரது ஒரே ஆசை.

ராகுலனோடு விரைந்து வந்த சுத்தோதனர், மருமகளின் விசேஷ அலங்காரத்தைப் பார்த்து மகிழ்ந்தார். இவளை இப்படிப்பட்ட கோலத்தில் பார்த்து எத்தனை ஆண்டுகள் ஆகின்றன! வா மகளே என அவளையும் அழைத்தவாறு வீதியில் இறங்கி நடந்தார். தோழி விகசிதா அவர்களைத் தொடர்ந்தாள். மக்கள் வெள்ளம் விலகி வழிவிட்டது. நிலவு போல் ஒளிவீசும் புத்தரைப் பிரதானமாய்க் கொண்ட துறவிகள் கூட்டம் எதிரே வந்து கொண்டிருந்தது. ‘புத்தம் சரணம் கச்சாமி! சங்கம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி!’ என்ற குரல்கள் எழுந்து அடங்கின. அரச குடும்பத்தினர் மகான் புத்தரின் அருகே வந்தார்கள்.

தூய்மையே வடிவாக, சலனங்களை வென்ற நிறைவோடு, சாந்தி தவழும் முகத்தோடு அவர்களைப் பார்த்தார் புத்தர். சுத்தோதனர் பேச்செழாமல் நிற்க, ‘மகனே ராகுலா! உன் தந்தையின் தாள் பணிவாய்!’ என அறிவுறுத்தி, தானும் புத்தரின் பாதங்களில் பணிந்து எழுந்தாள் யசோதரா. ராகுலன் வியப்பு கலந்த மகிழ்ச்சியோடு, அவரால் வசீகரிக்கப் பட்டவனாய் அவரையே பார்வையால் அள்ளி விழுங்கிக் கொண்டிருந்தான்.

எதுவும் பேசாமல் அமைதியாக புத்தரது திருமுகத்தையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள் யசோதரா. தனக்குப் பரிச்சயமான கணவர் சித்தார்த்தர் அல்ல இவர். கூட்டுப் புழு பட்டுப் பூச்சி ஆவது போல் முற்றிலும் மாறிய புது மனிதர். ஆன்மிக வானில் பறக்கும் இந்தப் பட்டுப்பூச்சி மறுபடியும் இல்லறக் கூட்டில் அடைபடாது. யசோதரா ஒரு பார்வையிலேயே உண்மையை உணர்ந்தாள்.

ராகுலனைப் பார்த்த அவள் ஒரு முடிவு செய்தாள். கபிலவாஸ்துவுக்கு மறுபடி வந்திருக்கும் இந்தத் தருணத்தில், மகனுக்கு நாட்டை வழங்கும் கடமையையாவது நிறைவேற்றட்டும். அவள் விதியின் விளையாட்டை அறியாதவளாய் மெல்லிய குரலில் சொன்னாள்:

''பிரபோ, இந்த ராஜ்ஜியம் இன்னமும் தங்களுடையதுதான். தங்கள் மகனுக்கு இதை வழங்குவதாக அறிவித்து விடுங்கள். அது உங்கள் கடமையும்கூட. இனி ராகுலன் அரசாளட்டும்!''

புத்தர் கலகலவெனக் குழந்தை போல் சிரித்தார்: ''பெண்ணே! நானோ முற்றும் துறந்த துறவி. எனக்கு மண்ணால் ஆன ராஜ்ஜியம் ஏதுமில்லையே? அதைத் துறந்துதானே துறவியானேன்! என்னிடம் இருப்பதெல்லாம் துறவு சாம்ராஜ்யம்தான். இவனுக்கு அத்தகைய பாக்கியம் இருக்குமென்றால் ஆனந்தமான அந்த சாம்ராஜ்யத்தில் இவனுக்கும் பங்கு வழங்குவதில் எனக்கு எந்தத் தடையும் இல்லை!''

இதைக் கேட்டு யசோதரா திகைத்து நிற்க, ராகுலன் அவர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்துச் சொன்னான்: ''அப்படியே ஆகட்டும். நான் தங்கள் சீடனாவேன். என்னையும் துறவியர் கூட்டத்தில் ஒருவனாகச் சேர்த்துக் கொள்ளுங்கள்!''

சொன்னபடியே புத்தரின் குழுவினரோடு இணைந்தான் அவன். யசோதரா திக்பிரமித்து நின்றாள்.

இனி தன் வாழ்வின் லட்சியம்தான் என்ன? கணவன் எவ்வழி மனைவி அவ்வழி என்பதே நெறி போலும்.

''பிரபோ! தங்களிடமிருந்து பிறக்கும் உள்ளொளி என்னையும் ஈர்க்கிறது. தங்கள் குழுவில் துறவினிகளுக்கு இடம் உண்டா?''

'பெண்ணே! கட்டாயம் இடம் உண்டு. அதற்கென்று உள்ள தனிக் குழுவில் நீ இணைந்துகொள். பிணி, மூப்பு, மரணம் ஆகிய மூன்றிலிருந்தும் எந்த மனிதரும் தப்ப முடியாது. ஆசை தான் துன்பத்திற்குக் காரணம். எல்லா ஆசைகளையும் ஒவ்வொன்றாய்த் துறக்க முயல்வாய்!''

யசோதரா விகசிதாவை அழைத்து தன் வயோதிக மாமனார் சுத்தோதனரின் கரங்களைப் பற்றி அவளிடம் ஒப்படைத்தாள்:

''விகசிதா! மகாராஜாவை உன் தந்தைபோல் கவனித்துக்கொள். என் மாமனார் கண்ணிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீரும் வரக்கூடாது. தந்தையே! என் மனநிம்மதி தேடி நான் எடுக்கும் முடிவுக்கு மானசீகமாக உங்கள் அனுமதியைப் பெறுகிறேன்!'

யசோதரா, துறவினிகளோடு சேர்ந்து கொண்டாள். சுத்தோதனர் திகைத்தார். விதி எவ்வளவு வேகமாக விளையாடுகிறது! 'சித்தார்த்தா, நீ இப்படிச் செய்யலாமா?' கேட்டுவிட வேண்டியதுதான். மகனே என்றழைக்க எண்ணினார். ஒரு தயக்கம் குறுக்கிட்டது. ஏதோ சொல்ல எண்ணி புத்தரின் முகத்தைப் பார்த்தார். புத்தர் பார்வையாலேயே என்னவென்று வினவினார்.

''ஒரு சத்தியம் செய்து தரவேண்டும்!''

''என்ன சத்தியம்?'' புத்தர் கனிவோடு கேட்டார்.

''தாய் தந்தை இருவரின் சம்மதமில்லாமல் யாரையும் துறவியாக்க மாட்டேன் என்ற சத்தியம்.''

''நல்லது. அதுவும் சரிதான். தாய் தந்தை இருவரின் சம்மதமில்லாமல் யாரையும் துறவியாக்க மாட்டேன். இதுவரை நடந்தவற்றிற்கு இது பொருந்தாது. இனி இவ்விதம் நடக்காது!

சொல்லிவிட்டுப் பதற்றமே இல்லாமல் அமைதியாக நடந்தார் புத்தர். அவரது குழுவினரோடு இணைந்து அவரைப் பின்பற்றினார்கள் ராகுலனும் யசோதரையும். தன் மூன்று உறவுகளையும் தொலைத்த பிறகு, அரசரே ஆனாலும் தானும் துறவி தான் என்பதை உணர்ந்தவராய் கண்ணீர் மல்க அவர்கள் விலகிச் செல்வதைப் பார்த்துக்கொண்டே நின்றார் சுத்தோதனர். 'வாருங்கள் அப்பா! அரண்மனைக்குப் போகலாம்!' எனத் தன் கண்ணீரைத் துடைத்தவாறே தளர்ந்திருந்த அவரை ஆதரவாய்க் கைப்பிடித்து அழைத்துச் சென்றாள் விகசிதா. மக்கள் கூட்டம் விலகி வழிவிட்டது. ●




நந்திவர்மனின் அந்தரங்க மந்திர ஆலோசனைக் கூடத்தில், அரசின் முக்கியப் பதவியிலிருக்கும் அனைத்து அமைச்சர்களும் ஒன்று சேர்ந்து அமர்ந்திருந்தனர்.

நடுவில் இருந்த ரத்தின சிம்மாசனத்தில், அரசன் நந்திவர்மன் அமர்ந்திருந்தான்.

அப்போது வாயில் காப்போன் வந்து, திருமுனைப்பாடி சிற்றரசர் நரசிங்கமுனையார் வந்திருப்பதாகக் கூற, வரச்சொல்லி ஆணையிட்டபின் திருமுனைப்பாடியார் வந்தார்.

‘‘வாருங்கள் திருமுனைப்பாடியாரே… என்ன சேதி?’’

‘‘மன்னா… கடம்பர் குல மகளின் குலக்கொழுந்து நீங்கள். தங்கள் வீரத்தில் எமக்கு ஐயமில்லை. ஆனால், தங்களைச் சூழ்ந்திருக்கும் ஆபத்துக்களை அலட்சியப்படுத்தாதீர்கள் மன்னா…’’

முக்கிய அமைச்சர் எழுந்து மெல்லப் பேசினார்.

‘‘அறிவோம் முனைப்பாடியாரே. அதற்காகத்தான் இந்த அவசரக் கூட்டம். வடக்கே ராஷ்டிரகூட அரசன் அமோகவர்ஷன், பல்லவ நாட்டின் மீது பாய நேரம் பார்த்திருக்கிறான். அரசர்க்குத் திறைச் செலுத்தும் சோனாட்டின் சில பகுதிகளைப் பிடிக்க ரகசியத் திட்டம் தீட்டி வருகிறான். அதுமட்டுமில்லை, அவனுக்குத் தூண்டுதலாக அரசரின் தாயாதி தம்பியான விக்கிரமன் முதலானோர் பகைவனுக்கு உதவக் காத்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் முனைப்பாடியார் என்ன புதுச்செய்தி கொண்டு வந்திருக்கிறீர்கள்? அறியலாமா?’’

‘‘செய்தி அல்ல. அரசரைக் காக்கும் ரக்ஷை… ஜீவரக்ஷை கொண்டு வந்துள்ளேன் அமைச்சரே…’’

நந்திவர்மன் திகைத்தான்.

‘‘ஜீவரக்ஷயா! என்ன அது? மன்னன் அனுமதி வழங்க, அந்த அவைக்கு ஒரு பளிங்குச் சிலை மெல்லிய துணியால் மூடப்பட்டு எடுத்து வரப்பட்டது.

காவலர்கள் அந்த மெல்லிய துணியை விலக்க, ஒரு அழகான பெண்ணின் முழு உருவம். சலவைக் கல்லில் செய்தது. அபயஹஸ்த முத்திரையுடன் நின்றது. அது சிலையா? இல்லை மெய்யாகவே ஒரு பெண்ணா என்று மயங்கும் அளவிற்குச் சிலையின் அமைப்பு இருந்தது. நந்திவர்மன் திகைத்தான்.

‘‘நய பரதனே… இது சாதாரணச் சிலை அல்ல. ஜீவராக சிலை. சில மூலிகைகளின் ரசாயனச் சேர்க்கை கொண்டு தயாரித்தது. இதனருகில் விஷமுள்ள எந்தப் பதார்த்தத்தைக் கொண்டு சென்றாலும் சிலை நீலநிறமாக மாறிவிடும். மன்னரை ஆபத்து டிசூழ்ந்திருக்கும் வேளையில், இந்தச் சிலை பாதுகாப்பாக ஜீவரக்ஷையாக இருக்கும் மன்னா…’’

நந்திவர்மன் வியந்தான். இப்படி ஒரு அற்புதமா?

அரசன் கட்டளைப்படி பொற்கிண்ணத்தில் பால் கொண்டு வரப்பட்டு அதில் கொடிய நாகத்தின் விஷம் சேர்க்கப்பட்டது. அந்தப் பொற்கிண்ணம் சிலையின் மிக அருகில் கொண்டு செல்லப்பட்டவுடன்…

ஆச்சரியம்… அற்புதம்! சிலை உடல் முழுவதும் நீலநிறமாக மாறியது.

தான் வடக்கே போயிருந்தபோது ஓர் அற்புதமான சிற்பியைச் சந்தித்ததாகவும், அவன் மூலம் இந்தச் சிலையை வடித்து எடுத்து வந்ததாகவும் அதை நந்திவர்மனுக்குக் கொடுக்க வந்ததாகவும் திருமுனைப்பாடியார் கூறினார்.

நந்திவர்மன் திறை செலுத்தவேண்டும் என்று அமோகவர்ஷனிடமிருந்து வந்த அந்த ஓலையை, நந்திவர்மன் திருப்பி அனுப்பினான். அத்துடன் போர்க்களத்தில் சந்திக்கவும் என்றும் தகவல் கொடுக்க…

போரால் நடுநடுங்கிப் போன அமோகவர்ஷன், சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு, தன் மகள் சங்கையையும் நந்திவர்மனுக்கு மணமுடித்துக் கொடுத்தான்

அது முதலிரவு அறை… திருமணம் கோலாகலமாக நடந்து முடிந்து… மங்கல வாழ்த்துப் பாடல்களுடன் பொன்னும், பொருளும் சீதனமாகத் தரப்பட்டு புஷ்பப் பல்லாக்கில் சங்கை அற்புதமாக அலங்கரிக்கப்பட்டு, மாமன்னரின் அரண்மனைக்கு அழைத்து வரப்பட, அந்த அரண்மனைக்குள் நுழைந்த சங்கை, நந்திவர்மனின் புகழ் கண்டு, பெருமை கண்டு, வீரம் கண்டு வியந்தாள். ‘சர்வன்’ என்று

சிறப்புப் பெயர் பெற்ற இவள் தந்தையால் நந்திவர்மனை வெல்ல முடியவில்லை. வலிமை மிகுந்தவன்.. வீரம் மிகுந்தவன்.. யானைப் படைத் துணையுடன் குருக்கோட்டிலே போர் நிகழ்த்தி வென்ற கோமான்.. தோற்ற அரசன்.. இவள் தந்தையால் தரப்பட்ட பரிசுதான் இவள்!

''தேவி.. என்ன யோசனை?''

நந்திவர்மன் சங்கையின் மென்தோள்களைத் தொட, சங்கை வெட்கித் தலைகுனிந்தாள்.

அங்கு வைக்கப்பட்டிருந்த அந்தப் பளிங்குச் சிலை ஜீவரக்ஷ சிலை அவர்களைப் பாசத்துடன் பார்க்கிறது.

சங்கை யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

ஐம்பெருங்குழுவும், எண் பேராயமும் அமைத்து திறம்பட அரசு செலுத்தும் நந்திவர்மனுக்கு எதிரிகள் அதிகம்தான். வானம் பொய்யாது, வளம்பிழைப்பு அறியாது நாடு செழிக்கிறது சந்தேகமில்லை.

''உரைசால் பத்தினியை உயர்ந்தோரும் வணங்குவர்'' _ என்று நந்திவர்மன் அடிக்கடி கூறுவான்.

இந்த உரைசால் பத்தினி?

சங்கை யோசித்தாள்.

மெல்லிய துணியால் மூடப்பட்ட அந்த ஜீவரக்ஷக சிலையின் அருகே போய்ப் பார்த்தாள்.

துணியை விலக்கினாள்.

சிற்பம் அற்புதமாக இருந்தது.

நந்திவர்மன் தற்சமயம் நாட்டில் இல்லை. பாண்டியன் ஸ்ரீமாறனையும், அவனுக்கு உயிர்த்துணையாகச் செயல்படும் தன் தம்பி விக்கிரமனையும் எதிர்த்துப் போராட தெள்ளாற்றுக்குப் போயிருக்கிறான் நந்திவர்மன். (தெள்ளாற்று) சங்கத் தமிழ் வளர்த்து மங்காப் புகழ் உடை கூடல் மாநகராம் மதுரையிலிருந்து பல்லவனுக்கு உட்பட்டிருந்த சோழவள நாட்டின் சில பகுதிகளைக் கவர்ந்துவிட்டான் பாண்டியன் ஸ்ரீமாறன். பெண்ணை ஆறுவரை அவன் கையில்தான் இருந்தது. பறிக்கப்பட்ட பகுதிகளை மீட்கப் புறப்பட்டு விட்டான் மன்னன். பாண்டியனுக்கும், விக்கிரமனுக்கும் புத்தி புகட்டத்தான் நந்திவர்மன் தெள்ளாற்றுப் போர் புரியப் புறப்பட்டிருக்கிறான். சங்கை ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள்.

தெள்ளாற்றுப் போர்.. மிகக் கொடூரமான போர். பிற்காலத்தில் சிவபக்தனாக மாறப்போகும் நந்திவர்மன் நிகழ்த்திய கொடுமையான போர்.

'குவலய மார்த்தாண்டன்' என்று போற்றப்பட்ட பேரரசன், போரில் தன்னிடம் தோற்று ஓடிவிட்ட பாண்டியனின் மகள் மாறன் பாவையை வேறு வழியின்றி மனைவியாக ஏற்றுக்கொண்டு அரசவைக்கு வெற்றியுடன், அத்துடன் வீரத் திருமகளுடன் அடி எடுத்து வைத்த அந்த நேரம் சங்கை நொறுங்கிப் போனாள்.

பகையின்றி பார் காக்கும் வேந்தன் கடைசியில் தன்னை வஞ்சித்துவிட்டானே என்று மனம் பொருமினாள்.

வீரத்தில் சிறந்த மன்னன் பெண் மனத்தைப் புரிந்துகொள்ளாத கயவனாகி விட்டதை எண்ணி வருந்தினாள். போருக்குப் போனால் வெற்றித் திருமகளுடன் பகைவரின் மகளையும் துணை சேர்க்கவேண்டுமா? பாண்டியன் மகள் மாறன் பாவையை அந்தப்புரத்துக்கு அழைத்து வந்த அரசன், சங்கையைப் பார்த்தான்.

‘‘சங்கை.. என்னை மன்னித்துவிடு.. இது காலத்தின் கட்டாயம். ஆனால் என்றும் என் பட்ட மகிஷி நீதான். இவள்.. இவள் பாண்டியன் மகள் மாறன் பாவை. இவள் என் மனைவி மட்டுமல்ல.. உன் சகோதரி.. அன்புடன் ஏற்றுக்கொள்..’’

சங்கை கண்ணீர் துடைத்து பாவையின் கைப்பற்றி தன்னிருப்பிடம் கூட்டிச் சென்றாள்.

அந்தப் பளிங்குச் சிலை.. ஜீவரக்ஷசி பார்த்துக் கொண்டிருந்தாள்.

தன் ஒற்றன் கூறியதைக் கேட்ட நந்திவர்மன் திகைப்புடன். சங்கையின் அந்தப்புரம் தேடிப் போனான்.

அங்கே மாறன் பாவை இருந்தாள்

சங்கையின் அரண்மனையில் மாறன் பாவை?

‘‘சங்கை எங்கே?’’ ‘‘அக்காவைத் தேடித்தான் நானும் இங்கே வந்தேன் பிரபு.’’

‘‘நீ சொல்வது பொய்.. உனக்கு பட்டத்தரசியாக ஆசை.. ஒற்றர்கள் வந்து தகவல் சொன்னார்கள். இந்தத் திருமணத்தில் உனக்கு விருப்பமில்லையாமே.. பட்டமகிஷியாக இல்லாமல், என் இரண்டாவது மனைவியாக வாழ உனக்கு விருப்பமில்லையாமே. அதனால் என் சங்கையைக் கொல்லத் துணிந்து விட்டாயாமே.’’

‘‘சர்வேஸ்வரா.. இதென்ன கொடுமை.’’ மாறன் பாவை அழுதாள்.

‘‘ஆம் தேவி.. நான் சங்கையைச் சந்திக்க இந்த வசந்தமாளிகை தேடி வரும்போது, வரும் வழியில் இருக்கும் இந்த நந்தவனத்தில் பூத்திருக்கும் காஷ்மீர ரோஜாக்களைப் பறித்து சங்கைக்குத் தருவது வழக்கம். இதை அறிந்த நீ, இங்கு மலர்ந்திருக்கும் அந்தப் பூக்களில் எல்லாம் பூ நாகங்களை படரச் செய்திருக்கிறாயாமே! நான் கொடுத்த மலர்களை முகர்ந்து பார்க்கும் சங்கை அந்தப் பூ நாகங்களால் தாக்கப்பட்டு, மூச்சு முட்டி மூக்கில் ரத்தம் வழிய இறக்கவேண்டும் என்பதுதானே உன் திட்டம்? வேண்டாம் தேவி.. இந்தப் பூக்களை சங்கை முகரவேண்டாம். நானே முகர்ந்து பார்க்கிறேன். யார் பட்ட மகிக்ஷி என்கிற போட்டி உங்களுக்குள் வேண்டாம்.’’

பேசியபடி நந்திவர்மன் நந்தவனத்தில் நுழைந்து மலர் ஒன்றினைப் பறிக்க முற்பட்டபோது..

‘‘அரசே அரசே நில்லுங்கள்..’’ என்று கதறியபடி ஓடி வந்தாள் சங்கை!

‘‘அவளின் பின்னே காவலர்களால் பிடித்து இழுத்து வரப்படும் விக்கிரமன்.. நந்திவர்மனின் தாயாதித் தம்பி.’’

‘‘சங்கை! உனக்கு ஒன்றும் ஆகவில்லையே.. ஒற்றர்கள் தெரிவித்தது?’’

‘‘தவறான செய்தி மன்னா.. உண்மையில் குற்றவாளி விக்ரமன்தான். உங்களைக் கொன்று அந்தப் பழியை எங்கள் இருவர் மீதும் சுமர்த்தி நாடு குழப்பமடைந்திருக்கும் நேரத்தில் ஆட்சியைப் பிடிக்க நினைத்த நயவஞ்சகன். என் அந்தரங்கச் சேடி ஒருத்தி, விக்கிரமனின் பழைய காதலி. அவள் மூலம் விவரமறிந்து விக்கிரமனை நம் மெய்காப்பாளர்களுடன் சென்று சிறைப்பிடித்து வந்தேன் பிரபு.’’ நந்திவர்மன் மெய்சிலிர்த்தான்.

‘‘தம்பி விக்கிரமா.. இதோ இவள் சங்கை. இராக்ஷ்டிரகூட அரசரின் மகள்.. இவள் மாறன்பாவை. என் விரோதி பாண்டியனின் மகள். இவர்கள் இருவரும் என் உயிரைக் காக்கத் தங்கள் உயிரைத் தரத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் உறவு என்ற பந்தமுள்ள நீயோ என்னைக் கொல்ல நினைக்கிறாய். உனக்கு என் உயிர்தானே வேண்டும் எடுத்துக்கொள்..’’

விக்கிரமன் தலைகுனிந்தான்.

ஒருவழியாக அரண்மனையிலிருந்து அகற்றப்பட்டு அந்த நந்தவனத்தின் நடுவில் அலங்காரமாக வீற்றிருந்த ஜீவரக்ஷகச் சிற்பம் இந்தக் காட்சியைக் கண்டவாறு நிற்கிறது.

விக்கிரமன் தன் உடைவாளை எடுத்தான்.

‘‘மன்னர் மன்னா... நான் அரசன் என்ற பதத்திற்கு அருகதை அற்றவன். இந்த உடைவாள் எனக்கெதற்கு?’’

கூறியபடி விக்கிரமன் தன் உடைவாளை உருவ...

அது தற்செயலாக அங்கு அலங்காரச் சிற்பமாய் நின்றிருந்த ஜீவரக்ஷகச் சிலையின் மீதுபட...

அடுத்த நொடிப் பொழுதில் அந்தச் சிலை நீலநிறமாக மாறிவிட...

விஷம் தடவிய உடைவாள்! மாமன்னரின் உயிர் குடிக்க நினைத்த உடைவாள். ஒரு நொடிக்குள் உண்மையை உணர்ந்து கொண்ட அரசரின் மெய்க்காப்பாளர்கள் விக்கிரமனை அந்த இடத்திலேயே அவனது விஷஉடைவாளால் ‘களப்பலி’ தர...

மாறன் பாவை கண்களை மூடிக்கொள்கிறாள். சங்கை நந்திவர்மனின் தோளில் சாய்கிறாள். நந்திவர்மன் அந்தச் சிலையைப் பார்க்கிறான். உண்மையில் ஜீவரக்ஷகி இந்தச் சிலையா? இல்லை... இந்தப் பெண்களா? இவர்கள் பூ நாகங்கள் அல்ல... பூவின் சுகந்தங்கள்.




சாணகர் தன் குடிலில் அமைதியின்றி அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார். எதிரே வந்து நிற்கும் மகன் சாணக்கியனை ஒருமுறை பார்த்துவிட்டு சாளரத்தின் வழியே வெளியே பார்த்தார். விந்திய மலைப் பகுதியின் ஏதோ ஒரு சிகரம், பனிபடர்ந்து தெரிந்தது.

தந்தையின் தளர்ந்துபோன நடை, கண்களில் தெரிந்த கவலை. இதற்கு சாணக்கியனுக்குக் காரணம் தெரியவில்லை. சிறிது நேரம் சிகரத்தையே பார்த்துக்கொண்டிருந்தவர், சாணக்கியன் பக்கம் திரும்பினார்.

நந்தப் பேரரசுக்கு எதிராக, தட்சசீலப் பல்கலைக்கழக மாணவர்களை ஒன்று திரட்டி, கிளர்ச்சி செய்வதாக அங்கிருந்து செய்திகள் வருகின்றனவே இது உண்மையா?’’

‘‘உண்மைதான். தனநந்த அரசின் இன்றைய ஆட்சி, எல்லா நிலைகளிலும் தோற்று விட்டது. தன நந்தனை எதிர்த்து மக்கள் புரட்சி செய்ய ஆயத்தமாகி விட்டார்கள். புரட்சிக்கு யார் தலைமை ஏற்கப்போகிறார்கள் என்பதுதான், இப்போதைய முக்கிய கேள்வி!’’

‘‘இந்த தேசத்தின் புதிய தலைமையை நாம் உடனே கண்டுபிடித்தாக வேண்டும். அது பற்றிக் கூறத்தான், உன்னை அவசரமாக அழைத்தேன். அதற்கு முன் இதைப்படித்துப் பார்.’’

அவர் சமீபத்தில் எழுதி முடித்த ஓலைச்சுவடியொன்றை எடுத்து அவனிடம் கொடுத்தார். கிரகங்களின் சஞ்சாரங்களை வைத்து அவர் கணித்து எழுதியிருந்த ஓலை அது. தந்தையுடன் பேசிக்கொண்டே அவைகளை ஒவ்வொன்றாகப் புரட்டிக்கொண்டே வந்தவன், கடைசி ஓலையைப் பார்த்துவிட்டு

பிரமித்துப் போய் நின்றான்.

'நந்தப் பேரரசு வீழப்போகிறது. அடுத்து மௌரியப் பேரரசு அதிகாரத்தைக் கைப்பற்றும். அதை உருவாக்க ஒரு அந்தணன் முன் நிற்பான். அவன் வழிகாட்டுதலின் பேரில்தான் அந்த அரசு கீர்த்தி பெறப் போகிறது. இது சத்தியம். சணகர் கணிப்பு' என்று அந்த ஓலையில் இருந்தது. இதைப் படித்த சாணக்கியன், ''மௌரியப் பேரசை ஆளப்போகிற அந்த மகத்தான மனிதன் எங்கே இருக்கிறான்? அதை முன்னின்று செயல்வடிவம் கொடுக்கப் போகிற அந்த அந்தண வாலிபன் யார்?''

''அந்த அந்தணன் நீயாகக்கூட இருக்கலாம். அந்தப் பேரரசை ஆளப்போகிறவனையும் நீதான் தேர்ந்தெடுக்கவும் போகிறாய்.''

''தந்தையே..''

''உண்மைதான். இப்பொழுது உனக்கு மிக முக்கியப் பணியொன்று காத்திருக்கிறது. நீ உடனே 'பிப்பளி' வனத்திற்குப் புறப்பட்டாக வேண்டும். உன்னிடம் நான் இரண்டு ஓலைகளைக் கொடுத்தனுப்புவேன். அதில் ஒரு செய்தி, அங்கிருக்கும் மூராதேவி என்கிற பெண்ணுக்கு. மற்றொன்று தட்சசீலப் பல்கலைக்கழக பிரதம அத்யட்சகருக்கு (பிரின்ஸ்பால்). மூராதேவியைப் பார்த்துவிட்டு நீ அங்கிருந்தே தட்சசீலம் போகும்போது, உன்னுடன் மூராவின் மகன் சந்திரகுப்தனும் வருவான். அவனை தட்ச சீலப் பல்கலைக்கழகத்தில் அரசியல் பிரிவு மாணவனாகச் சேர்த்துவிடு. இந்த இரண்டாவது ஓலையில் அதன் விவரமிருக்கிறது.''

''யார் இந்த சந்திரகுப்தன்? யார் இந்த மூராதேவி?''

''தனநந்தனின் ஆசைநாயகி. அவளுக்குப் பிறந்தவன்தான் சந்திரகுப்தன். அரசியல் சதுரங்கத்தில் மூராவை வேறு ஜாதிப் பெண் என்று அவமானப்படுத்தி, அரண்மனையில் ஒதுக்கிவைத்துவிட்டார்கள்.

மூராவுக்குப் பிறந்தது ஆண் குழந்தையென்பதால், அடுத்து அரசு பரம்பரை வாரிசுக்கு அவன் வந்து விடக் கூடாது என்று திட்டமிட்டு, அவர்கள் இருவரையும் ஒழித்துவிடவும் சதியாலோசனை நடந்தது. நந்தன் அரண்மனையில் மூராவின் இனத்தவர்களே அதிகம் பணி புரிவதால், அவர்கள் மூலமாக இந்த அரசியல் ரகசியம் மூராவுக்குத் தெரிந்துவிட்டது. இனி அந்த அரண்மனையில் இருக்கும் ஒவ்வொரு நாளும் ஆபத்தான நாளே என்பதைப் புரிந்துகொண்ட மூரா, இரவோடு இரவாக அரண்மனையிலிருந்து வெளியேறி, எனது ஆஸ்ரமத்தில் தஞ்சம் புகுந்துவிட்டாள்.

எனது ஆஸ்ரமத்தில் இருப்பதும் அவ்வளவு பாதுகாப்பில்லை என்பதால், அவளை அவளது விஸ்வாசிகள் சிலருடன் நான் அவளை 'பிப்பளி' வனத்திற்கு அவளது மகன் சந்திரகுப்தனுடன் அனுப்பிவைத்து விட்டேன். மகன் சந்திரகுப்தனுடன் மூரா அங்கேயிருப்பது இதுவரை யாருக்கும் தெரியாது. மூரா சந்திரகுப்தனைப் பற்றிய ரகசியம் எனக்குத் தெரியும் என்பதைப் புரிந்து கொண்ட தனநந்தன், அரசியல் ரீதியில் எனக்கு மறைமுகமாகப் பல தொல்லைகள் தர ஆரம்பித்தான்.

நான் எதற்கும் அஞ்சவில்லை என்றாலும், எனக்கும் மூராவுக்கும் நடுவே ரகசிய தொடர்புகள் அரசியல் ரீதியில் இன்னுமிருக்கிறது. சந்திரகுப்தன் இன்று வளர்ந்து வாலிபனாகி விட்டான். அவனை, அடுத்த அரியணைக்குத் தயார்படுத்த வேண்டிய பொறுப்பு நம்மை வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது'' என்றார் சணகர்.

நகர எல்லை, நதியோரம், மலைப்பாதை என்று நீண்ட, சாணக்கியனின் பயணம், பிப்பளி வனப்பகுதியுடன் கூடிய நகரை அடையும்போது, மூன்று தினங்களாகி விட்டன.

மூராதேவியின் இருப்பிடத்தை அங்கேயுள்ள விடுதியொன்றில் விசாரித்து விட்டு வெளியே வந்தபோது, நான்கு வீரர்கள் அவனை வழிமறித்து நின்றார்கள்.

''யார் நீங்கள்? என்னையேன் மறிக்கிறீர்கள்?''

''வா எங்களுடன்!''

''எங்கே? ஒரு யாத்திரிகனான என்னைச் சுதந்திரமாகப் போகவிடுங்கள்.''

''யாத்திரிகனா! எங்கிருந்து வருகிறாய்?''

''பாடலிபுத்திரத்திலிருந்து வருகிறேன்.''

''சுங்கச் சாவடியில், உனக்கும், உன் குதிரைக்கும் அனுமதி முத்திரை வாங்கியிருக்கிறாயா?''

''பிப்பளி தனி தேசமில்லையே?''

''தனி தேசமல்லதான். என்றாலும், எங்களுக்கென்று பண்டகச் சாலை, கஜானா எல்லாம் இருக்கிறது. உன்னுடன் வீண் விவாதம் செய்ய எங்களுக்கு நேரமில்லை. பேசாமல் எங்களுடன் வா!'' _ இரண்டு வீரர்கள் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு நிற்க, இருவர் சாணக்கியனுக்கு இருபுறமும் நின்று அவனை பலவந்தப்படுத்தாதக் குறையாக இழுத்தனர். என்னதான் நடக்கிறது பார்க்கலாமே என்று அவர்களுடன் நடந்தான்.

சுற்றிலும் ஏராளமான சந்தன மற்றும் பிப்பளி மரங்கள் வானுயர்ந்த தேவதாரு, நடுவே முற்றிலும் மரத்தினாலேயே வடிவமைக்கப்பட்டு உருவான இல்லத்தின் முன், சாணக்கியனை அழைத்துப் போய் நிறுத்தினார்கள். மரத்தினால் கட்டப்பட்ட வீட்டின்மேல் ஏராளமான கொடிகள் படர்ந்து அதன் கூரையையே மறைத்துக் கொண்டிருந்தன. பார்ப்பதற்கு லதாக்கிரகம் போன்றிருந்தது. அதைச் சுற்றி மயில்கள் சுற்றிக் கொண்டிருந்தன. இவர்கள் போய் நின்றவுடன், மரக்கதவைத் திறந்து சிவந்த நிறத்தில் அதிக உயரமும் குள்ளமுமில்லாத ஒரு பெண்மணி வெளியே வந்தாள். ஓரங்களில் மணிகளின் வேலைப்பாடுகளுடன் கூடிய ஆடை மற்றும் நிறைய மாணிக்கக் கற்களில் ஆபரணங்கள். தோற்றத்திலும் முகப் பொலிவிலும் ஒரு கம்பீரம் இருந்தது.

''கேட்டால் பாடலிபுத்திரத்திலிருந்து வரும் யாத்திரிகன் என்கிறான். யாத்திரிகன் உங்களைப் பற்றி ஏன் விசாரிக்க வேண்டும்? இவனைப் பார்த்தால் ஒரு யாத்திரிகன் போலத் தோன்றவில்லை. மகத ஒற்றனாக இருப்பானோ எனச் சந்தேகிக்கிறோம். யார், என்னவென்று விசாரித்துவிட்டு எங்களுடன் அனுப்பிவையுங்கள். சென்ற முறை வந்த மகத ஒற்றர்களை நல்ல மரியாதை செய்து அனுப்பி வைக்க, விந்தியமலை உச்சிக்கு அழைத்துப்போனது போல இவனை அழைத்துப் போய் விடுகிறோம்.''

''நீங்கள் போங்கள். இவனை நான் விசாரிக்கிறேன்.''

சாணக்கியனின் குதிரையை அங்கிருந்த மரத்தில் பிணைத்துக் கட்டிவிட்டு வீரர்கள் அகன்றனர்.

''நல்லவேளை, உன் உருவம்தான் உன்னைப் பாதுகாத்திருக்கிறது. பார்த்தால் அந்தணன் போலத் தோன்றுகிறாய். உடம்பில் பூணூல், மேலே உத்தரீயம், நெற்றியில் சந்தன இழைகள், தலையில் குடுமி, கழுத்தில் உருத்திராட்ஷ மணிமாலைகள். யார் நீ, எங்கிருந்து வருகிறாய்?''

''சாணக்கியன்.''

பதற்றமடைந்த முரா, கதவைச் சாத்தி விட்டு அவனுடன் உள்ளே வந்தாள். விருந்தோம்பலெல்லாம் நடந்து முடிந்தது.

அவன் கொண்டு வந்திருந்த ஓலையை முராவிடம் கொடுத்தான். முரா ஓலையைப் படித்துக் கொண்டிருக்கும்போது, வெளியே குதிரையின் குளம்பொலியும் அது வாசலில் வந்து நிற்பதும் கேட்டது. எல்லாவிதமான நிகழ்வுகளுக்குமாகத் தன்னைத் தயார்படுத்திக்கொண்டு இடையில் உள்ள சிறிய கத்தியின் பிடியில் கையைவைத்தபடி பரபரப்புடன் எழுந்து நின்றான் சாணக்கியன்.

''பயப்படாதே. இந்த இடத்திற்குள் அவ்வளவு சுலபமாக யாரும் வந்து விட முடியாது.''

முரா பேசிக் கொண்டிருக்கும்போதே, கதவைத் திறந்துகொண்டு அந்த வாலிபன் உள்ளே வந்தான்.

வானத்துச் சூரியனிலிருந்து ஒரு செதில் கீழே வந்துவிட்டது போன்றதொரு பிரகாசம். அந்த வீடே திடீரென்று பளிச்சிட்டது. புஜங்களும் கைகளும் தசைப்பிடிப்புடன் காணப்பட்டன. விரிந்த மார்பு, கழுத்து வரை தொங்கும் கேசம். முகத்தில் அசாத்திய தேஜஸ். திடகாத்திரமான அந்த வாலிபனைப் பார்த்த நொடியிலேயே சாணக்கியன் பிரமித்துப் போய்விட்டான்.

இந்த மாவீரன் யார்? _ கேள்வி மனதிற்குள்ளும் பார்வை முராவின் பக்கமுமாகப் பதிந்தது.

‘‘என்ன சாணக்கியா அப்படிப் பார்க்கிறாய்? இவன் என் மகன் சந்திரகுப்தன்.’’

‘‘சந்திரகுப்தன்!’’

‘‘சந்திரா, இவன் பாடலிபுத்திர குருதேவர் சணகரின் புதல்வன் சாணக்கியன். தட்சசீலப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றுகொண்டே மகதப் பேரரசை எதிர்த்து புரட்சிக் குரல் எழுப்பி, நந்தனின் நிம்மதியைக் குலைத்து அவனைச் சுட்டுக் கொண்டிருக்கும் நெருப்பு.’’

சந்திரகுப்தன் சிரித்துக் கொண்டே சாணக்கியனைத் தழுவிக் கொண்டான்.

‘‘வா நண்பா, உன் வரவும் அறிமுகமும் நல்லதாக மலரட்டும். நீ பிப்பளி வனத்திற்கு என் தாயாரைப் பார்க்க வரப் போகிறாய் என்ற செய்தி எங்களுக்கு முன்பே தெரியும்.’’

‘‘சந்திரா, இனி பேசுவதற்கு நேரமில்லை. நீ உடனே தட்சசீலம் புறப்படுவதற்கான ஏற்பாடுகளில் கவனம் செலுத்து. சாணக்கியனைப் பார்த்தபின் ஒரு நாள்கூட தாமதிக்கக்கூடாதாம். ‘சந்திரகுப்தனின் ஒவ்வொரு நாளும் இனி முக்கியத்துவம் வாய்ந்ததாகும்’ என்று ஓலையில் சணகர் குறிப்பிட்டிருக்கிறார். உன்னுடைய நண்பனுடன் உட்கார்ந்து பயணகாலம், பயண வழி எல்லாவற்றையும் பேசி முடிவு செய்து கொள். எல்லாவற்றிற்கும் உன்னுடைய எதிர்கால வழிகாட்டி, சாணக்கியன்தான். அவன் கட்டளைப்படிதான் இனி நீ நடக்க வேண்டும்.’’

தாயாரின் சொல்லுக்குக் கீழ்ப் படிந்தவன்போல, தாயாருக்கு சிரம் தாழ்த்தி வணங்கினான்.

முராதேவியின் பிப்பளி வன இல்லத்திலிருந்து இரண்டு புரவிகள் புறப்பட்டன.

சாணக்கியனைத் தொடர்ந்து மகன் சந்திரகுப்தன் தட்சசீலம் நோக்கி தன் முதல் பயணம் தொடங்குவதைப் பரவசத்துடன் பார்த்தபடி நின்றாள் முரா.




சென்ற நூற்றாண்டின் ஆரம்பம்;

ஆங்கிலேயர்களின் கை சிறிது சிறிதாக ஓங்கிக் கொண்டிருந்த காலம். மேவார் ராஜ்யத்தின் பழைய சிறப்பெல்லாம் மறைந்துவிட்டது; பழைய வீரம் ஒடுங்கி விட்டது. பெயரளவில் மாத்திரம் ராணாவாக இருந்து கொண்டு பீம்சிங் அதை ஆண்டு வந்தார்.

அவரது குமாரி தான் கிருஷ்ணகுமாரி. பதினாறு வயது நிரம்பிய இளமை மயில். ஏற்கெனவே அவளை மார்வார் ராஜாவுக்குத் திருமணம் செய்து கொடுப்பதென்று நிச்சயத்திருந்தார்கள். ஆனால் திருமணமாகுமுன்பே அந்த ராஜா எதிர்பாராமல் இறந்து விட்டார்.

இந்த நிலையில் மற்றொரு ராஜபுத்திர ராஜ்யமான ஜய்ப்பூரிலிருந்து ஒரு படை உதயபூருக்கு வந்து சேர்ந்தது. கிருஷ்ணகுமாரியைத் தங்கள் மன்னர் ஜகத்சிங் என்பவருக்குக் கொடுக்க வேண்டுமென்ற திருமண வேண்டுகோளுடன் அந்தப் படை வந்திருந்தது.

ஜகத்சிங்கின் வேண்டுகோள் வந்த பிறகு, மேவார் ராணா பீம்சிங் பல விதத்தில் யோசனை செய்தார். அதற்கு ஒப்புக் கொண்டு விடுவது என்று தீர்மானித்தார். இல்லையென்றால், தேவையற்ற போர் மூளும். ஜகத்சிங்குக்குத் தமது சம்மதத்தைத் தெரிவித்து தூது அனுப்பினார்.

இதற்கிடையே, ஏற்கெனவே முதலில் நிச்சயித்து இறந்த மார்வார் தேசத்திற்குப் புதிய வாரிசு வந்திருந்தார். அவர் பெயர் ராஜா மான்சிங்! அவருக்கு விஷயம் தெரிய வந்தது. அவர் உடனே மேவார் ராணாவுக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அதில் ‘‘தங்கள் மகள் கிருஷ்ணகுமாரி ஏற்கெனவே எங்கள் தேச ராஜாவுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்தாள்! அவர் இறந்து விட்டதால், அவருக்குப் பதிலாக சிங்காதனம் ஏறிய எனக்குத்தான் கிருஷ்ணகுமாரி உரியவள். இதற்கு எதிராக முனைந்தால், அதன் விளைவுகளுக்குத் தாங்கள் பொறுப்பு ஆவீர்கள்!’’ என்று எழுதியிருந்தார்.

மேவார் ராணா திகைப்பில் ஆழ்ந்து விட்டார். இருந்தும் ஜகத்சிங்குக்கு வாக்கு நேர்ந்து விட்டதால், அதை மாற்ற வழியில்லை என்பதை உணர்ந்தார்.

மேவார் ராணாவின் நிலை ராஜா மான்சிங்குக்குத் தெரிய வந்தது. உடன் வெகுண்டெழுந்தார் அவர். படைகளைத் திரட்டிக் கொண்டு, தமக்கு எதிராகக் கிருஷ்ணகுமாரியை மணக்கத் துணிந்த ஜகத்சிங்குடன் யுத்தம் செய்யத் தயாரானார். ஜகத்சிங்கும் மனம் தளரவில்லை. தனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணை இழந்து விட அவரும் தயாராக இல்லை. இவ்விதம் ஒரு பெண்ணுக்காக இரு ராஜ்யங்கள் போர்த் தயாரிப்பில் ஈடுபடலாயின.

இதில் ஒரு வேடிக்கை!

மராத்திய மன்னர் சிந்தியா, ஏற்கெனவே கிருஷ்ணகுமாரியின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார். அவர் இந்தப் பூசலில் இறங்க வேண்டும் என்று தீர்மானித்தார். ராஜாமானுக்கு ஆதரவாக படையைத் திரட்டிக் கொண்டு மேவார் தலைநகரான உதயபூரை முற்றுகையிட்டார்.

மேவார் ராணா மனம் கலங்கினார். தமது மந்திரி கிஷன்தாஸுடன் வெகு நாழிகை ஆலோசித்தார். மாலை நேரமாகி இரவும் வந்து கொண்டிருந்தது. ஒரு முடிவும் அவர்கள் எடுக்கவில்லை.

அப்போது இருட்டில் வெளி வாசலில் ஓர் உருவம் தென்பட்டது. இளவரசி கிருஷ்ணகுமாரி, மெள்ள நடை நடந்து உள்ளே வந்தாள். எளிய தோற்றம்தான்! அவள் மீது நகைகளோ, அணிகலன்களோ அதிகம் இல்லை. பல மராத்தியப் படையெடுப்புகளுக்கு ஆளான ராணா, தமது குடும்ப அணிமணிகளைக் கூடக் கப்பப் பணமாக மராத்தியர்களுக்கு கொடுக்க வேண்டி வந்தது.

‘‘அப்பா’’ என்றாள் மெல்லியதாக. ‘‘நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். உங்கள் தீர்மானம் என்ன என்று என்னிடம் சொல்லலாமா?’’ என்றாள்.

‘‘இப்போது ஆங்கிலேயர்களின் உதவியைப் பெறலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்’’ குரல் கமறச் சொன்னார் ராணா.

‘‘ஆங்கிலேயர்கள் உதவியையா? வேண்டாம்… அவர்களை விட்டு விடுங்கள்!’’

‘‘வேறு வழி?’’

‘‘சிந்தியா சொல்வதற்கு இசைந்து விடுங்கள்…’’

திடுக்கிட்டார் ராணா!

கிருஷ்ணா திரும்பினாள். விழிகளைக் கைகளால் துடைத்தாள்.

அவள் போன பிறகு ‘‘கிஷன்தாஸ்!’’ என்றார் ராணா.

‘‘ஜகத்சிங்குக்கு என் பெண்ணைக் கொடுக்கப் போவதில்லை என்று சிந்தியாவுக்குத் தெரிவி. ராஜா மானுக்கே கொடுத்து விடுகிறேன்’’ என்றார் தலை குனிந்தவாறு.

சிந்தியாவுக்குச் செய்தி போய்ச் சேர்ந்தது. அவர் தம் படைகளுடன் திரும்பிப் போகலானார். இந்தச் செய்திகள் ஜகத்சிங்குக்குப் போய்ச் சேர்ந்தன. நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை நிறுத்துவது என்பது ராஜ புத்திரர்களிடையே பெரிய அவமானமாகக் கருதப்படும். எனவே, கோபம் கொண்டு பெரிய படையைத் திரட்டினார் அவர். ராஜா மானுடன் (மார்வார் அரசர்) போர் செய்யத் தயாரானார்.

ராஜா மானும் கிருஷ்ணகுமாரியை விட்டு விடத் தயாராயில்லை. சிந்தியாவின் மறைமுக ஆதரவு தனக்குக் கிடைக்கிறது என்று தெரிந்ததும், அவரும் பெரும் படை ஒன்றைத் திரட்டலானார்.

இதனால் போர் மூண்டது. இரு படைகளும் சந்தித்தன. பெரும்போர் தொடங்கியது. போர் ஆறு மாதங்கள் நடந்தன. இருதரப்பாருக்கும் வெற்றி கிடைக்கவில்லை! பெரிய சோதனையாக இருந்தது.

இந்தச் சமயத்தில் ஜகத்சிங்கின் பீரங்கிப் படைத் தலைவன் அமீர் என்பவன் எதிரிப்படை ராஜா மானுடன் சேர்ந்து விட்டான்.

இதனால் எல்லா நாடுகளும் கஷ்டப்பட்டன. ஜனங்கள் வறுமையில் ஆழ்ந்தார்கள். அமீர் மிகவும் வருந்தினான். இதற்கு ஒரு தீர்வு காண விரும்பினான்.

மேவார் ராணாஜிக்கு வேண்டப்பட்ட ஒருவரைச் சந்தித்தான் அமீர். தனது திட்டத்தை விவரித்தான்.

‘‘ராணாவிடம் நான் சொல்வதைத் தெரிவியுங்கள்! ஒன்று அவர் தமது வாக்குறுதியை மறந்து விட்டு கிருஷ்ணகுமாரியை ராஜாமானுக்குக் கொடுக்க முன் வர வேண்டும்! அது அவருக்கு அவமானம் தருவதோடு ஜகத்சிங்குடன் தீராப் பகையையும் உண்டாக்கி விடும். அப்படிச் செய்யாமல் ஜகத்சிங்குக்குக் கொடுத்தால் ராஜா மானின் சீற்றத்துக்கு அவர் ஆளாக வேண்டும். மேவாரையும் ராணாவையும் அழித்துவிட ராஜா மான் தயங்க மாட்டார். எனவே, இரண்டு வழியிலும் ஆபத்து உண்டு. இவை இரண்டையுமே தவிர்க்க வேண்டுமானால், மூன்றாவது வழி ஒன்று இருக்கிறது’’ என்றார் அமீர்.

‘‘என்ன வழி?’’

‘‘கிருஷ்ணகுமாரி இறந்து விடுவதுதான்!’’

வந்தவர் திடுக்கிட்டார்.

‘‘யோசனை வேண்டாம், உங்களை இங்கே அழைத்திருப்பதன் காரணமே இதற்குத்தான். போங்கள், ராணாவிடம் அமீரின் யோசனை இதுதான் என்று தெரிவியுங்கள்!’’ என்று அழுத்தத்தோடு கூறினான் அமீர்.

அமீரின் மூன்றாவது வழியைக் கேட்டதும் ராணா அதிர்ந்து போய் உட்கார்ந்தார். ஏற்கெனவே பொருளெல்லாம் இழந்து நொந்து போயிருந்தார் ராணா! ஒரு அரசருக்குரிய குறைந்த வசதிகளைக் கூட அவர் இழந்திருந்தார். அமைச்சரவையில் இருந்தவர்களும் அமீர் சொன்ன வழியை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்றார்கள்.

ராணா தம் முடிவை ராணியிடம் தெரிவிக்க மூன்று நாட்கள் ஆயின. அதை ஏற்றுக் கொள்ள ராணிக்குப் பல நாட்களாயின. புகழ் பெற்ற சௌரா வம்சத்தைச் சேர்ந்தவள் ராணி. ஒரு குடும்பத்துக்காக ஒருவரை இழப்பதெல்லாம் அவர்கள் இரத்தத்திலேயே ஊறி வந்த ராஜபுத்திர வழக்கம்.

இருப்பினும் தனது உயிருக்கு உயிரான ஒரே மகளை, பதினாறு வயது நிரம்பிய இளங்கன்னியை இழப்பதென்றால்?

''அம்மா, அழாதே! என்றைக்கு எனக்கு நிச்சயிக்கப்பட்டவர் இறந்தாரோ, அன்றைக்கே என் விதி எனக்குப் புரிந்து விட்டது. எனக்காக வருந்தாதே. எனக்காக எத்தனை சண்டைகள் நடந்து விட்டன! இன்னும் எத்தனை நடத்த மன்னர்கள் காத்திருக்கிறார்கள்! நாட்டையும், ஊர்களையும், மக்களையும் பாழடித்து விட்டார்கள் இவர்கள். கேவலம் ஒரு பெண்ணுக்காக எவ்வளவு அநியாயம் செய்யத் தயாராயிருக்கிறார்கள்! என் விதி இது! அப்பா எடுத்த முடிவு சரியான முடிவு. எனக்காகப் பல ராஜ்யங்களில் உள்ள பல்லாயிரம் மக்கள் உயிர் இழப்பதை விட நான் என்னையே இழக்கத் தயாராக இருக்கிறேன் அம்மா! இதில் எனக்கு ஒரு வருத்தமும் இல்லை'' என்றாள் கிருஷ்ணகுமாரி.

அவளது நிர்மலமான முகத்தை உற்று நோக்கினாள் ராணி. துக்கம் அடைத்து வந்தது.

குறித்த நாள் வந்தது. கிருஷ்ணகுமாரி வெண்மை நிறத்தில் உடை தரித்து, குடும்பக் கடவுள்களை வணங்கினாள். பிறகு தன் அறைக்கு வந்தாள். எளிமையான பஞ்சணை மீது படுத்துக் கொண்டாள்.

ராணி ஒரு பாத்திரத்தை எடுத்து, அவள் முன்பாக வந்தாள். கண்களில் கண்ணீர் பொழிந்து வந்தது. அந்த அறையில் அவர்களைத் தவிர, ஒரு பணிப்பெண் மாத்திரம் இருந்தாள்.

''ஏன் அம்மா அழுகிறாய்? என் வாழ்க்கையின் துக்கங்கள் இன்றோடு முடிகின்றன என்று நீ மகிழ்ச்சி கொள்! ராஜபுத்திர குலத்தில் ஒரு பெண் பிறந்தால் தியாகத்திற்காகவே தான் அவள் பிறக்கிறாள்! என் தியாகம் எனக்குப் பெருமை! உனக்கும் பெருமை! நம் நாட்டிற்கே பெருமை!'' கூறிவிட்டு அவள் சட்டென்று பாத்திரத்தில் இருப்பதை வாங்கிக் குடித்தாள். மறுகணம் உள்ளே ஒரு தீ பாய்வது போலிருந்தது.

சிறிது நேரம் ஆகியது. இளவரசியின் உயிர் இன்னும் நீங்கிவிடவில்லை. விஷம் சரியாக வேலை செய்யவில்லை என்று தெரிந்தது. மீண்டும் ஒரு பாத்திரத்தில் விஷம் கொண்டுவரப் பணிப் பெண் விரைந்தாள்.

இரண்டாவது பாத்திரத்தை நடுங்கும் கைகளில் ஏந்தினாள் இளவரசி. விஷத்தை இரண்டாவது தடவை அருந்தினாள்.

அந்த தடவையிலும் எதிர்பார்த்தது நடக்கவில்லை,. ஆகவே, அதிக உக்கிரமான கலவையில் விஷம் மேலும் இரு தடவைகள் கொண்டுவரப்பட்டன. நான்காவது தடவையில் பலன் கிடைத்தது. இளவரசி கிருஷ்ணகுமாரி கண்களை மூடினாள். பஞ்சணையில் மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டாள்.

அரண்டு புரண்டாள் ராணி. அரண்மனை முழுதும் வீறிட்டுக் கொண்டு அலைந்தாள்.

நான்கு நாட்கள் உணவும் தண்ணீரும் இல்லாமல் அவள் வாழ்ந்தாள். ஐந்தாவது நாள் அவள் எதிர்பார்த்தது அவளுக்கும் கிடைத்தது. மரணம் அவளையும் தழுவியது. மேவார் ராஜ்யம் முழுவதும் துக்கம் ஒரு கிரகணம் போல் இறங்கியது. மக்கள் துயரத்தில் கண்ணீர் வடித்தார்கள்.

சீக்கிரமே மேவார் களை இழந்தது! நாடு முழுவதும் பஞ்சம் நிறைந்தது; நகரங்கள் அழிந்தன. மக்கள் வெளி ராஜ்யங்களுக்கு ஓடலானார்கள். ஒரு பெண்ணைக் கொன்ற தோஷத்திற்கான சாபம் போல் ராஜபுதனம் முழுவதுமே அழியலாயிற்று என்று சரித்திரக்காரர்கள் கூறுகிறார்கள். அந்த அழிந்த மேவாரை நேரில் கண்ட ஆங்கிலத் தளபதி கலோனல் டோடும் (ராஜபுதன சரித்திரம் எழுதியவர்) இது குறித்து உருக்கமாக எழுதியுள்ளார்.

முடிவு?

கி.பி. 1817_ல் மேவார் ராணா ஆங்கிலேயப் பாதுகாப்புக்குள் அடங்குவதாகப் பத்திரங்களில் கையெழுத்திட்டார். எண்ணூறு வருடங்களாகச் சுதந்திர ராஜ்யமாக விளங்கிய மேவார் தனது

சுதந்திரத்தைக் கடைசியில் இழந்தது.




அன்று முழுமதி நாள்.

இரவின் முதல் ஜாமம் முடிந்து இரண்டாவது ஜாமம் தொடங்கியிருந்தது. மேல் மாடத்தை ஒட்டிய உப்பரிகையில் உட்கார்ந்திருந்த மகாராணி தேவசேனாவை, மேற்கு வானத்தில் வைரத்துண்டுகளாய் ஒளிர்ந்த சப்தரிஷி மண்டல விண்மீன் கூட்டமோ, அருகாமையில் இருந்த அந்தப்புர நந்தவனத்திலிருந்து வெளிப்பட்ட நறுமண பூங்காற்றோ மகிழ்ச்சியில் ஆழ்த்த முடியாமல் தோற்றுப் போயிற்று.

காரணம், மகாராணியின் அடிவயிற்றில் ஒரு இனம் புரியாத குழப்பம். முகம் ஒரு சிலையைப் போல் இறுகியிருந்தது.

''வணங்குகிறேன் மகாராணி!''

தனக்குப் பின்னால் எழுந்த குரல் கேட்டு தேவசேனா திரும்பிப் பார்த்தாள். தன்னுடைய அருமை மகள் இளவரசி இளம்பிறையின் பணிப்பெண் பவளமணி கைகளைக் கூப்பியபடி நின்றிருந்தாள்.

''நீ என்னிடம் தனிமையில் பேச விரும்புவதாக மாலையில் சொன்னாய். என்ன விஷயம்?''

''சொல்கிறேன் மகாராணி!'' என்றவள், பவ்யத்தோடு குனிந்து மெலிதான குரலில் சொன்னாள்.

''நம் இளவரசியார் நடவடிக்கை கள் சிறிது நாட்களாய்ச் சரியில்லை மகாராணி...''

தேவசேனாவின் முகம் நொடியில் மாறியது.

''சரியில்லையென்றால்...?''

''அதைச் சொல்வதற்கே என் நாக்கு கூசுகின்றது மகாராணி...! ஒவ்வொரு நாளும் மூன்றாவது ஜாமம் கழிந்ததும் இளவரசியாரின் அறையில் ஒரு ஆண் குரல் கேட்கிறது. அது யார் என்று தெரிந்து கொள்வதற்காகக் கதவின் சாவி துவாரத்தில் கண் வைத்துப் பார்த்தேன். உள்ளே இளவரசியாரின் படுக்கையறை கட்டிலில் ஒரு வாலிபன்...''

தேவசேனா பதறிப் போனவளாய் எழுந்தாள். அவளுடைய கூர்விழிகளில் கோபம் கொப்பளித்தது.

''யார் அந்த வாலிபன்?''

'தெரியவில்லை மகாராணி... ஆனால், அந்த வாலிபன் அரச குலத்தில் பிறந்தவன் அல்ல என்பது மட்டும் உறுதி''

''இன்றைக்கும் அந்த வாலிபன் வருவானா...?''

''உறுதியாய் வருவான் தேவி...!''

''சரி... மூன்றாவது ஜாமம் முடிந்ததும் நான் இளவரசியாரின் அந்தப்புரத்துக்கு வருகிறேன். நீ உறங்காமல் எனக்காகக் காத்திரு...!''

‘‘உத்தரவு மகாராணி...’’ பளவமணி குனிந்து வணங்கிக் கொண்டிருந்த அந்த வேளை பின்பக்கம் அந்தக் குரல் கேட்டது.

‘‘நானும் உன்னோடு வருவதில், உனக்கு எந்த ஒரு தடங்கலும் கிடையாதே தேவி...?’’

தேவசேனா பதறிப் போனவளாய், திரும்பிப் பார்த்தாள். மன்னர் பெரும்வழுதி தன் தூண் போன்ற இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்தபடி நின்றிருந்தார்.

தேவசேனா அச்சத்தில் உறைந்துபோய் நிற்க, மன்னர் பக்கத்தில் வந்து அவளுடைய செழுமையான தோளின் மேல் கையை வைத்தார்.

‘‘பயம் கொள்ள வேண்டாம் தேவி...! பணிப்பெண் பவளமணி சொன்னதையெல்லாம் நானும் அப்படி ஓரமாய் நின்று செவிமடுத்துக் கொண்டுதான் இருந்தேன். நம் மகள் இளம்பிறையின் நடவடிக்கைகளில் எனக்கும் சிறிது ஐயப்பாடு இருந்தது. அவளுடைய சயன அறைக்கு இரண்டு முறை பகல் வேளைகளில் சென்று பார்த்தபோது அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். பகலில் ஒரு பெண் உறங்குகிறாள் என்றால், இரவில் சரியாக உறக்கம் இல்லையென்றுதானே பொருள்...? அந்த வாலிபன் யார் என்பதை, இன்றைய இரவின் மூன்றாவது ஜாமத்தில் கண்டுபிடித்து விடலாம்...’’

பவளமணி மன்னனைத் தாள் பணிந்தாள்.

‘‘அரசே...! இப்படிப்பட்ட ஒரு செய்தியை உங்களிடம் சொல்ல நேர்ந்தமைக்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன்....’’

‘‘உனக்கொரு உத்தரவு...’’

‘‘சொல்லுங்கள் அரசே!’’

‘‘நீ ஒரு உண்மையான ராஜவிசுவாசியாக இருக்கும் பட்சத்தில் இதைப்பற்றி வெளியே யாரிடமும் பேசக்கூடாது...’’

‘‘என் உயிரே போனாலும் வாயைத் திறக்கமாட்டேன் அரசே!’’

அஅஅஅஅ

இரவின் மூன்றாவது ஜாமம் முடிந்து கொண்டிருக்க, இளவரசியின் சயன அறைக்கு வெளியே இருட்டில் நிழல் உருவங்களாய் மன்னர் பெரும்வழுதியும், மகாராணி தேவசேனாவும், பணிப்பெண் பவளமணியும் லயம் மாறித் துடிக்கும் இருதயத் துடிப்புக்களோடு நின்றிருந்தார்கள்.

நான்காவது ஜாமம் தொடங்கியது. அடுத்த சில கணங்களிலேயே இளவரசி இளம்பிறையின் அறையிலிருந்து சிரிப்பொலியும், ஒரு ஆணின் குரலும் கேட்டது.

மன்னர் பெரும்வழுதி மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு அறைக் கதவருகே போய் குனிந்து சாவி துவாரத்தில் கண்ணை வைத்துப் பார்த்தார்.

சயன அறையில் மங்கலான வெளிச்சம் பரவியிருக்க, அன்னப்பறவை மஞ்சத்தின் மேல் இளவரசி இளம்பிறை தெரிந்தாள். பக்கத்திலேயே அவளுடைய தோள்களைத் தொட்டபடி அந்த வாலிபன்.

ஒரு சில கணங்கள் வியப்பில் உறைந்து போய் விக்கித்துப் போன மன்னர், அதிலிருந்து மீண்டு கதவைப் படபடவென்று தட்ட ஆரம்பித்தார். குரல் கொடுத்தார். குரலில் கோபம் கொப்பளித்தது.

மன்னரைப் பார்த்ததும் மருண்டாள் இளம்பிறை. ‘‘தந்தையே! இந்த அகால நேரத்தில் எதற்காக உங்கள் வருகை...? யார்க்கேனும் உடல் நலம் பாதித்துவிட்டதா...?

''எங்கே அவன்..?''

இளம்பிறை நெற்றியைச் சுருக்கினாள்.

''யாரைக் கேட்கிறீர்கள்?''

''உன் சயன மஞ்சத்தில் இடம் பிடித்து இருந்தானே ஒருவன்.. அவனைத்தான் கேட்கிறேன்.. அவனை எங்கே ஒளித்து வைத்து இருக்கிறாய்?''

இளம்பிறை தன் இடதுகை ஆட்காட்டி விரலால் நெஞ்சைக் காட்டியபடி துணிச்சலோடு சொன்னாள். ''அவரை இங்கே ஒளித்து வைத்து இருக்கிறேன்..''

தேவசேனா மகளுக்கு முன்பாய் வந்து சினம் பொங்க நின்றாள். ''இளம்பிறை! பெற்ற தந்தையிடம் இப்படியா பேசுவது..? உன் சயன அறையில் இரவில் ஒரு வாலிபன்! எங்களுக்கு உடம்பு கூசுகிறது!''

இளம்பிறை மெல்ல சிரித்தாள்.

''உங்களுக்கு உடம்பு கூசவேண்டிய அவசியமே இல்லை. அவர் என்னைத் திருமணம் செய்யப் போகிறவர். அவர் பெயர் பராந்தகன். ஒரு சிற்றரசில் படைத்தளபதியாக உள்ளார். அவரைப் பற்றி நானே உங்களிடம் சொல்லலாம் என்று நினைத்தேன். அதற்கு முன்பாக உங்களுக்கே உண்மை தெரிய வந்ததில் எனக்கு மகிழ்ச்சியே''.

மன்னர் வெறியோடு கத்தினார்.

''உன்னிடம் எனக்கென்ன பேச்சு. வெளியே வரச்சொல்''.

இளம்பிறை ஒரு மந்தகாசப் புன்னகையோடு அறையின் மேல்பக்கம் இருந்த சாளரத்தைக் காட்டினாள்.

''நீங்கள் கதவைத் தட்டிய விநாடியே அவர் சாளரத்தின் வழியே தப்பித்துப் போய்விட்டார். இந்நேரம் அவருடைய புரவி ஒரு காத தூரத்தைச் கடந்து போயிருக்கும்..!''

மன்னர் பெரும்வழுதி சிவந்த விழிகளோடு சினம் மேலிட மகளை ஏறிட்டார்.

''நீ அந்தப் பராந்தகனைத்தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறாய்?''

''ஆமாம்..''

''நாங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால்?''

''நீங்கள் ஒப்புக்கொள்ளும்வரை நான் காத்து இருப்பேன். பராந்தகனின் உயிர்க்கு உங்களால் ஏதாவது ஆபத்து ஏற்பட்டால், இந்த இளம்பிறையின் உடம்பிலும் உயிர் இருக்காது.. திருமணம் என்றால் அது பராந்தகனோடுதான்..!''

மன்னர் தன் வலதுகையின் ஆட்காட்டி விரலை உயர்த்தினார் ''என்னுடைய முடிவையும் கேட்டுக்கொள். உனக்கும் உன் மாமன் மகன் நன்மாறனுக்கும்தான் திருமணம் நடக்கும். இதில் எந்த மாற்றமும் இல்லை.. இனி அந்தப்புரத்துக்குள் மட்டும் அல்ல.. இந்த நாட்டின் எல்லைக்குள்ளும் நுழைய முடியாது..'' உரத்த குரலில் சொல்லிவிட்டு மன்னர் வெளியேற தேவசேனாவும் அதே கோபத்தோடு பின்தொடர்ந்தாள்.

அமாவாசை ஒழிந்து வளர்பிறைக்காலம் துவங்கியிருக்க, அன்று பஞ்சமி நாள்.

இளம்பிறை அதிகாலையே எழுந்து நீராடி, மாற்றுடை அணிந்து, ஒரு குவளைப் பால் பருகிவிட்டு, மேல் மாடத்துக்கு வந்து இருக்கையில் சாய்ந்தாள். தலை சுழல்வது போல் இருந்தது. உடம்பை நிதானத்துக்குக் கொண்டு வந்து அமர்ந்து உட்கார்ந்து கொள்ளும் முன் துவண்டு சரிந்தாள்.

மீண்டும் அவளுக்கு நினைவு திரும்பியபோது _ இளம்பிறையின் காதுகளில் மங்கல வாத்திய ஒலிகளும், வேத விற்பன்னர்களின் உச்சாடனங்களும் ஸ்பஷ்டமாய் விழுந்தன. சிரமத்தோடு எழுந்து அமர்ந்தாள். உடம்பில் பட்டாடை. சகல அவயங்களில் ஆபரணங்கள். கைகளில் மருதாணிப்பூச்சு.

வலது காதருகே குரல் கேட்டது. மன்னரின் குரல்.

‘‘என்ன இளம்பிறை..! அப்படி பார்க்கிறாய். நீ இப்போது மணப்பெண். நாம் இப்போது இருப்பது நஞ்சுண் டேஸ்வர கோயில். இன்னும் ஒரு நாழிகை நேரத்துக்குள் உனக்கும் நன்மாறனுக்கும் திருமணம்.’’

இளம்பிறையின் இடதுகாதருகே மகாராணியின் குரல் கேலியாய் ஒலித்தது. ‘‘உனக்கும் நன்மாறனுக்கும் நடக்கப் போகும் திருமணத்தைக் காண, ஊரே இந்தக் கோயிலுக்கு வந்துள்ளது. எந்த எதிர்ப்பையும் வெளிப்படுத்தாமல் மணவறையில் போய் அமர்ந்து விடு. பராந்தகனை இனி நீ மறந்துவிட வேண்டியதுதான்..!’’

இளம்பிறை அந்த மயக்கநிலையிலும் புன்னகைத்தாள்.

‘‘என்ன சிரிக்கிறாய்..!

பராந்தகன் என்று ஒருவன் இருந்தால்தானே அவனை மறப்பதற்கு!’’

மன்னரும் மகாராணியும் திகைத்துப்போய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

‘‘இளம்பிறை! நீ என்ன சொல்கிறாய்..?’’

‘‘உண்மையைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அன்று என் சயன அறையில் நீங்கள் பார்த்தது பராந்தகனை அல்ல. பராந்தகனைப் போல் ஆண் வேடம் போட்ட என் தோழி குமுதவல்லியைத்தான்.’’

‘‘இ.. இ.. இதெல்லாம்... எ.. எ... எதற்காக?’’

‘‘நான் நன்மாறனை திருமணம் செய்து கொள்ளத்தான்!’’

‘‘நீ நன்மாறனைத் திருமணம் செய்து கொள்ள நாங்கள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லையே..?’’

‘‘என் தாய் நீங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்பது உண்மை. ஆனால் மன்னரின் நிலைமை அப்படியில்லையே..! அவருடைய மனசில் ஒரு ஊசலாட்டம் இருந்தது. நான் விரும்பிய நன்மாறன் எனக்கு அவசியமாய்க் கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் நடத்திய ஒரு போராட்டம்தான் இது’’

சொன்ன இளம்பிறை கண்ணாடியில் தன்னுடைய மணமகள் அலங்காரத்தை சரிபார்த்துக் கொண்டு மணவறைக்குச் செல்லத் தயாரானாள்.



அவனுக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை.

அமிர்தா தந்தையைத் திரும்பிப் பார்த்தாள்.

அவர் புன்னகைத்தார். ‘‘கவலைப்படாதே. இன்னும் அரை நாழிகையில் கண் திறப்பான். அவன்

உண்பதற்கு ஏதாவது கொடு. யார், என்ன என்று விசாரித்து வை.''

அவர் தன் மருந்துப் பேழையோடு அவசரமாய் கிளம்பிச் சென்றார்.

அமிர்தா மீண்டும் அவனைப் பார்த்தாள்.

அவர் சொன்னாற்போல் அரை நாழிகையில் அவனிடம் அசைவு தெரிந்தது. கண் விழித்து சற்று நேரம் மலங்க மலங்கப் பார்த்தவனின் அருகில் சென்றாள்.

''நான் எப்படி இங்கு..?''

''காட்டில் மயங்கிக் கிடந்தீர்கள். நானும் என் தந்தையும் இங்கே கொண்டு வந்து சிகிச்சை செய்தோம். என் தந்தை அரண்மனை வைத்தியர் என்பது உங்கள் அதிர்ஷ்டம். நீங்கள் யாரென அறியலாமா?''

''மேலைச் சாளுக்கியத்தைச் சேர்ந்த ஒரு வீரன். தங்கள் மன்னரை ராஜாங்க விஷயமாகக் காண்பதற்காக வந்திருக்கிறேன். நெடுந்தொலைவிலிருந்து வருவதால் சரியான உறக்கமில்லை. உணவில்லை. மயக்கமடைந்திருக்கிறேன்.''

''தங்களை அனுப்பியது யார்? உங்கள் மன்னரா?''

''மன்னித்து விடு பெண்ணே. அரசாங்க விஷயத்தை இதற்கு மேல் சொல்ல இயலாத நிலையில் இருக்கிறேன். நான் உடனே கிளம்ப வேண்டும்.''

''நீங்கள் மிகவும் களைத்திருக்கிறீர்கள். நாளை செல்லலாமே. என் தந்தையும் வந்து விடுவார். மேலும் மன்னரை நீங்கள் சந்திக்க அவரே அழைத்துச் செல்வார்.''

அவன் மறுக்கவில்லை.

அன்று முழுக்க அவளோடு நிறையப் பேசினான். அவளது அழகும், பரிவும், நிதானமும் அவனைக் கவர்ந்தது. அன்றிரவு அவளது தந்தை திரும்பி வருவதற்குள் அவன் மனம், அவளை காதலிக்கத் துவங்கியிருந்தது.

இரவு வைத்தியர் வந்தார்.

''எப்படியிருக்கிறார் நமது விருந்தாளி?''

''தங்கள் கருணையில் மிகவும் நன்றாகவே உள்ளேன்.'' அவன் வெளியில் வந்து கரம் குவித்து அவரை வணங்கினான்.

''வெகு தூரத்திலிருந்து வருவது போல் தெரிகிறது. இங்கு எதற்கேனும் என் உதவி தேவைப்பட்டால் கூறுங்கள்.''

''மிக்க நன்றி. நான் மன்னரைக் காண வேண்டும். இந்த ஓலையை மன்னரிடம் கொடுத்து உதவ முடியுமா?''

அவன் முத்திரையிட்டு கட்டிய ஓலை ஒன்றை எடுத்து அவரிடம் நீட்டினான்.

மறுநாள் வைத்தியர் கிளம்பிச் சென்ற பிறகு, கிடைத்த தனிமையில் அவள் அவனை வம்புக்கு இழுத்தாள்.

‘‘மன்னருக்கு மட்டும்தான் ஓலை அனுப்புவீர்களா?’’

‘‘அதில் உனக்கென்ன வருத்தம்?’’

‘‘நீங்கள் தூதுவர்தானே?’’

அவன் புன்னகைத்தான்.

அப்போது வாயிற்புறம் குதிரைக் குளம்பொலிகள் கேட்க, அவன் வேகமாய் வாயிலுக்குச் சென்றான்.

‘‘இங்கு சோமேஸ்வரன் என்பது...’’

‘‘நான்தான்.’’

‘‘வணங்குகிறேன். மன்னர் உங்களைக் கையோடு அழைத்து வரக் கூறினார் குதிரை தயாராக உள்ளது.’’

அவன் மகிழ்ச்சியோடு கிளம்பினான், தாவி குதிரையில் ஏறியமர்ந்து அதன் சேணத்தைப் பிடித்து செலுத்தியவனிடம் தெரிந்த அசாத்திய கம்பீரத்தை வியப்போடு கவனித்தாள் அமிர்தா.

‘‘சாளுக்கிய மன்னனை இந்த நிலையில் நான் எதிர்பார்க்கவில்லை.’’

சோழ மன்னர் ராஜராஜன் அவனை வரவேற்று அமர வைத்தபடி வருத்தத்தோடு கூறினார்.

‘‘நடந்ததைக் கூறுவீர் சோமேஸ்வரரே.’’

‘‘களசூரியன் பிஜ்ஜலனின் பிடியில் இப்போது மேலைச்சாளுக்கியம் உள்ளது மன்னா. பிஜ்ஜலனால் விரட்டப்பட்டு, அனைத்தையும் இழந்து உங்கள் உதவியை நாடி வந்திருக்கிறேன். நீங்கள் மனம் வைத்தால் என் நாடு மீண்டும் எனக்குக் கிடைக்கும்.’’

‘‘நிச்சயமாக. உதவிநாடியோரை ராஜராஜன் கைவிட மாட்டான். நீங்கள் தனியாக வந்துள்ளீரா? அல்லது சிறிய படைபலமாவது உள்ளதா உங்களிடம்?’’

‘‘இல்லை மன்னா.’’

‘‘கவலை வேண்டாம். எனக்கு கொஞ்சம் கால அவகாசம் மட்டும் கொடுங்கள். மேலைச்சாளுக்கியத்தை மீட்டு, உங்களுக்கு மீண்டும் முடிசூட்ட வேண்டியது என் பொறுப்பு. அதுவரை என் விருந்தினராக இந்த மாளிகையில் தங்கியிருங்கள்.’’

‘‘நன்றி மன்னவா... அதற்குமுன் நான் நேரில்போய் வைத்தியரிடம் விடைபெற்று வருகிறேன்.’’

‘‘நீங்கள் யாரென்பது யாருக்கும் தெரிய வேண்டாம் என்பது என் அபிப்ராயம். சென்று வாருங்கள்.’’

சோமேஸ்வரன் மீண்டும் வைத்தியர் வீட்டுக்கு வந்தான். அமிர்தா மூலிகை அரைத்துக் கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும் முகம் மலர வந்தாள்.

அவன் விடைபெற்றபோது, அவள் முகம் வாடிப்போயிற்று.

‘‘என்னைப் பிரிவதில் வருத்தம்தானே உனக்கு?’’

அவள் கண்கலங்கினாள்.

சோமேஸ்வரன் அவளருகில் வந்து தன் சுட்டு விரலால் அவள் முகத்தை நிமிர்த்தி, அவளை உற்றுப் பார்த்தான்.

''நான் வருவேன். வந்து உன்னை அழைத்துச் செல்வேன். இந்தப் பிரிவு நிரந்தரமல்ல புரிகிறதா..?''

அவன் வெளியில் வந்து குதிரையில் ஏறிச்செல்ல, அவள் துக்கமும் சந்தோஷமும் கண்களை நிறைக்க, அவன் செல்வதையே பார்த்தாள்.

இரண்டாம் ராஜராஜன் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தான். அவன் முகம் தீவிர சிந்தனையிலாழ்ந்திருந்தது. அவன் முன்னால் படைத்தளபதிகள் அவன் உத்தரவுக்காகக் காத்திருந்தனர்.

''நான் சோமேஸ்வரனுக்கு வாக்களித்துவிட்டேன். மேலைச்சாளுக்கியத்தை நாம் வெற்றி கொண்டேயாக வேண்டும். கல்யாணபுரத்தில் சோமேஸ்வரனுக்கு பட்டாபிஷேகம் நடத்தி வைக்கும் வரை எனக்கு ஓய்வில்லை.''

''ஆனால் நமது படைபலம் இப்போது போதிய நிலையில் இல்லை மன்னா. பாண்டி

யனின் வளர்ச்சி ஒருபுறம் ஓங்கிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில், மேலைச்சாளுக்கியத்திற்கு நமது படைகளை அனுப்புவது சாத்தியமல்ல. சரியுமல்ல.''

''அதுவும் சரிதான். நான் இதைப்பற்றி யோசிக்காமல் இல்லை. நான் உடனே வேங்கி மன்னனைச் சந்திக்க வேண்டும். பழையாறைக்கு வேங்கி மன்னனை உடனே புறப்பட்டு வரச் சொல்லி தூதுவன் ஒருவரை அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள்.''

இரண்டொரு நாட்களில் வேங்கி மன்னனை பழையாறை அரண்மனையில் சந்தித்து ஆலோசனை நடத்தினான்.

''சோழ மன்னர் கட்டளையிட்டால் இந்த க்ஷணமே கல்யாணபுரத்தின் மீது படையெடுக்கத் தயாராக உள்ளேன்.''

''எடுத்த எடுப்பில் போர் என்பது இப்போதைய நிலையில் அவ்வளவு சரியல்ல வேங்கி மன்னா. பாண்டியனின் கை ஓங்கிக்கொண்டு வருகிறது. நமது படையெடுப்பு பற்றிக் கேள்விப்பட்டால், அவன் பிஜ்ஜலனுடன் சேர்ந்து கொண்டு நம்மை எதிர்க்க வாய்ப்பிருக்கிறது. எனவே, சாதுர்யமாகத்தான் நாம் நமது அடிகளை எடுத்து வைக்க வேண்டும். நீ எனது தூதுவனாக கல்யாணபுரம் செல். பிஜ்ஜலனைச் சந்தித்து நியாயங்களைக் கூறி மேலைச் சாளுக்கியத்தை சோமேஸ்வரன் வசம் ஒப்படைத்து விடச் சொல். அதற்கு மறுத்தால்?'' என்று நிறுத்திய ராஜராஜன், வேங்கி மன்னனை அருகில் அழைத்து மிகச்சிறிய குரலில் அவனுக்கு சில உத்தரவுகளைப் பிறப்பித்தான். அடுத்த இரு தினங்களில் அவன் ராஜராஜனின் தூதுவனாக, கல்யாணபுரம் நோக்கிப் புறப்பட்டான்.

பிஜ்ஜலன் ஏளனமாகச் சிரித்தான். அவன் கண்களில் நரியும் புலியும் நர்த்தனமாடின. ''உயிரே போனாலும் இந்த கல்யாணபுரத்தை சோமேஸ்வரனுக்கு விட்டுத் தந்து, விலகமாட்டேன் என்று ராஜராஜனிடம் போய்ச்சொல்.''

''இதுதான் உன் முடிவா..?''

''ஆம்.''

''இதன் விளைவுகள் மோசமாகவும் இருக்கக் கூடும்.''

''மிரட்டல் வேண்டாம் வேங்கியரசே. ராஜராஜன் நிலையே இப்போது ஆட்டம் கண்டிருக்கிறது. பாண்டியனின் வளர்ச்சியைக் கண்டு சோழ தேசம் நடுங்கிப்போயிருப்பதும் தெரியும். அவரிடம் போதிய படைபலம் இருந்திருந்தால், இந்நேரம் பேச்சுவார்த்தையா என்னோடு நடத்திக்

கொண்டிருப்பார் உன் மூலம்..? போய் உமது மன்னனிடம் இந்த வேண்டாத வேலையை நிறுத்திவிட்டு சோழ தேசத்தை கவனிக்கச் சொல்.''

வேங்கியரசன் அவனை உற்றுப் பார்த்து விட்டு, எழுந்தான். எதுவும் பேசாது திரும்பி நடந்தான்.

அவன் சென்ற சிறிது நேரத்தில், வீர சைவன் ஒருவன் பிஜ்ஜலனைச் சந்தித்தான்.

''கோச்சர்ல கோட்டாவில் மிகப்பெரும் அளவில் யாகம் நடத்தி தேவி வழிபாடு செய்ய இருக்கிறோம். முதல் மரியாதையை மன்னர் ஏற்றுக் கொண்டு யாகத்தை நடத்தித் தர வேண்டும்'' அவன் கூற, பிஜ்ஜலன் முகம் மலர்ந்தான்.

''அதற்கென்ன நடத்தி விட்டால் போகிறது. தேவியின் அருள் எனக்குத் தேவைதான்.''

பிஜ்ஜலன் ஒப்புக்கொண்டான். அதற்கடுத்த சில தினங்களில் கோச்சர்ல கோட்டாவுக்குத் தன் மெய்க்காப்பாளர்களோடு சென்றவனை அங்கிருந்த வீரசைவர்கள் வரவேற்றனர். அடுத்த சில மணித்துளிகளில் வீரசைவர்களின் வேடத்திலிருந்த வேங்கி நாட்டுப்படை, பிஜ்ஜலனை மிகச்சுலபமாக முறியடித்து மேலைச்சாளுக்கியத்தைத் தன் வசம் கொண்டது.

ராஜராஜனின் தலைமையில் நான்காம் சோமேஸ்வரனுக்குச் சிறப்பாக முடிசூட்டும் விழா நடந்தது.

சோமேஸ்வரன் இரண்டாம் ராஜராஜனை அணைத்துக்கொண்டு தன் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்தான்.

''என் நன்றியை எந்த விதத்தில் நான் செலுத்த வேண்டும் சொல்லுங்கள் ராஜராஜரே?''

''எனக்கு எதுவும் தேவையில்லை சோமேஸ்வரா. வேங்கி நாட்டின் இளவரசியை நீ மணந்து கொண்டால், மேலைச்சாளுக்கியமும் கீழைச்சாளுக்கியமும் இதன் மூலம் தன் உறவைப் புதுப்பித்துக் கொண்டு பலம் பெறும். சாளுக்கிய மன்னர்கள் ஒருவருக்கொருவர் நட்போடு இருக்க வேண்டியது அவசியம் என நான் நினைக்கிறேன்'' ராஜராஜன் கூற, சோமேஸ்வரன் அதை ஆமோதித்தான்.

''மகிழ்ச்சியோடு சம்மதிக்கிறேன் மன்னா'' என்றான்.

நடந்தது எதுவும் தெரியாமல், வைத்தியரின் அப்பாவி மகள், அவன் வருவான் என்ற நம்பிக்கையோடு தினமும் உறங்கி, தினமும் விழித்து தன் தந்தைக்கு மூலிகை அரைத்துக் கொடுத்தபடி அவன் வரவுக்காகக் காத்திருந்தது சோமேஸ்வரனுக்குத் தெரிய வாய்ப்பில்லை




மணகரை வாசல் வெறிச்சோடிக்கிடந்தது.

ஆயிரம் கால் ஊன்றின அர்த்தனாரி மண்டபத்தில் நெடுமரமாய் நிற்கும் தூண்களில் கோபப்புகை கக்குவது போல், தீவட்டிச் சுடர்கள். அந்தச் சுடர்களின் ஆக்ரோஷம் பூந்துறை மன்னன் காளிங்கராயக் கவுண்டரின் முகத்திலும் பிரதிபலித்தது.

மன்னர் அவ்வளவு சுலபமாய்க் கோபப்படமாட்டார். அப்படிக் கோபப்பட்டால் ஒரு ஜாம நேரமாவது ருத்திரமூர்த்தியாகவே காட்சியளிப்பார். அந்த நேரத்தில் பட்டத்துராணி காணியாலம் காக்கம் தேவி அருக்காணியாத்தாகூட அவரெதிரில் வரமாட்டார். ஆனால், இப்போதோ அதன் எல்லைகளையும் கூட கடந்துவிட்டார்.

''எனக்குச் சுயநலமா? யார் ஏவிவிட்ட அசிங்கச் சொல் இது? இந்த ஒரு வார்த்தைக்காக என் மணிமுடி துறக்கிறேன். எனக்கு இந்த நாடும் வேண்டாம். அரியணையும் வேண்டாம். இந்தக் கால்வாயில் இனி ஒரு சொட்டுத் தண்ணீரும் பருக மாட்டேன். என் வம்சா வழிகள் கூட இதில் ஒரு சொட்டுத் தண்ணீர் பருகார். இது இந்தக் காளிங்கனின் இரண்டாம் சபதம்!'' அவன் கோபம் கொப்பளிக்க கொந்தளித்தபோதே மணகரைவாசலில் குழுமியிருந்த எண்ணாயிரம் சேனைகளும், பதினாறாயிரம் குடிகளும் நடுநடுங்கித்தான் போயின.

என்றாலும் துளி அஞ்சாமல்தான் பேசினாள், அந்த ஆட்டக்கார சிறுக்கி.

''ஆயிரந்தான் ஆனாலும் மகாராஜா நீங்க வாய்க்காலு வெட்டியது நாட்டுக்கு நல்லதுன்னு ஊர்மக்கள் போற்றலாம். ஆனால், நான் பேசமாட்டேன். நீங்க முக்காத வழி தூரம் போன சர்ப்பத்துக்கு இணையா ஏழு காத தூரத்துக்கு வாய்க்காலு வெட்டியதுல பயிர்பச்சை விளையப் போவதென்னவோ வாஸ்தவந்தான். ஆனாலும், அது நம்ம இளையராஜா காதலுக்குத்தானேயொழிய குடிகளுக்காக இல்லையே! அது உங்க சுயநலந்தானே?''

'மலுக்'கென்று ஒரு பார்வை. 'களுக்'கென்று பிறிதொரு சிரிப்பு. இமைப்பொழுதில் கண்ணுக்குள்ளிருந்து ஒரு மின்னல் வெட்டல். கொஞ்சம் ஆடித்தான் போனார் மன்னவர்.

''கால்வாய் உங்க காதல் சுயநலம்தானே?'' திரும்பத் திரும்ப நாராசமாய் அந்த வார்த்தைகள். சபையில் பெரும் சலசலப்பு எழ மன்னன் பேசத் தொடங்கினான்.

''இந்த வாய்க்கால் நீரை நான் பருகினால்தானே சுயநலம்? என் மக்கள் பருகினால் பொதுநலம் தானே? நானும் என் வம்சமும் தென் திசை செல்கிறோம். என் தளபதி இனி இந்தப் பூந்துறை நாட்டை ஆள்வார்!''

விஜயநகரம் ஆளப்பட்ட தேவராயர் அவர்களின் குமாரனுக்குச் சித்த பிரம்மை நீக்கினவர் காளிங்கராய மன்னர். அதனால் அவர் கடாட்சத்தில் ஆனைமலைச் சாறலிலே காணிக்கைநாடு பூந்துறை நாட்டிடம் ஒப்படைப்பு இருந்ததால், காரியம் சுலபமாகி விட்டது. ஆனால் பூந்துறை நாடுதான் ஒரே நாழிகையில் ஒப்பாரிக்கோலம் பூண்டு விட்டது. 'சொன்ன சொல் தவறாதவன் காளிங்கன்' என்பது எட்டுப்பட்டியும், சுத்துப்பத்து பாளையப்பட்டுகளும் அறிந்த விஷயம்.

அவரைக் கைப்பிடித்த மகாராணிக்குத் தெரியாதா? ராமனுடன் வனவாசம் புறப்பட்ட சீதை போல், உடனே புறப்பட்டு விட்டாள். இங்கே லட்சுமணன் இல்லை. பதிலுக்குக் காளிங்கரின் அருமைப்புதல்வர், பூந்துறை நாட்டு இளவரசர் நஞ்சய்ய காளிங்கன்தான் இருந்தான்.

அவனுக்கு இதில் ஒன்றுமே புரியவில்லை. எதற்காக எதை வேண்டுமானாலும், ஏன் பூந்துறை நாட்டையே கூட விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்தான். ஆனால், கேவலம் ஒரு ஆட்டக்காரி சொல்லுக்காக நாட்டைவிட்டு, தன் காதலுக்காக ஆறேழு ஆண்டு காலம் வெட்டி வச்ச வாய்க்காலை விட்டுவிட்டு, யாருக்காக _ எதற்காக நாடே இந்தப் பாடுபட்டதோ அந்த பண்ணகுலப்பைங்கிளி, தன் அருமைக்காதலியை விட்டு விட்டுச் செல்வதில் அவனுக்கு விருப்பமேயில்லை. 'அப்படியே அவளைச் சம்பந்தம் பேசப்போனாலும் அப்பவே 'பராரி' எளக்காரம் பேசின அவள் குடும்பம் இப்போது பராறியாகிவிட்ட இந்த இளவரசனுக்குப் பெண் கொடுப்பார்களா?' அவன் மனதில் ஓடும் கவலை ரேகைகள். அவள் காதலி தாமரைநாச்சியின் நினைவுகள் நெஞ்சில் மோதியது.

அவள் வம்சம் காளிங்கராயன் வம்சத்துக்கு மாமன் மச்சான் முறை. தன் நாட்டையும் அதில் உள்ள வளத்தையும் எள்ளி நகையாடியதால், நீண்டகாலப்பகை என்பது, பின்னாளில்தான் தெரிந்தது. அதனால் காளிங்கராயர் அந்தக் குடும்பத்தில் பெண்ணெடுக்கமாட்டேன் என்று உறுதிபட நின்றார். ஆனால், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் தாமரைநாச்சி நினைப்பாலே பட்டத்து இளவரசர் இளைத்துத் துரும்பாகி நிற்கவே, அரசர் பண்ணகுல வம்சத்தில் பெண் கேட்டு நிச்சயத்திற்கும் நாள் குறித்தார்.

நிச்சயதார்த்தத்தன்று பூந்துறை நாடே பெண்வீட்டில் குழுமியிருந்த வேளை. இரவு நேரம். ‘‘வந்தவர்களுக்குச் சமைக்க எந்த அரிசி போடறது!’’ சமையல்காரன் கேட்ட சந்தேகம். பெண் வீட்டுப் பெண்டுகள் பதிலுக்கு, ‘‘கம்பு விளையற சீமையிலிருந்து வந்தவங்களுக்கு எந்த அரிசின்னு தெரியப் போவுது? பரறிசி போடு!’’ இளக்காரமாய்க் கூறின வேகம். காளிங்க மன்னரின் செவிகளுக்கும் சேதி எட்டி விட்டது. ஏற்கெனவே ரோஷக்காரர். அந்தக் கடுவார்த்தையால் ருத்ரகாரராகிப் போனார்.

‘ரிஷபகிரி சோழராஜா மகளை முறை சரித்தவன். சேர ராஜா பாணியில் கன்னாலம் கட்டிக் கொண்டவன். எட்டாயிரம் குடி சீதனத்துடன் பூந்துறை நாடேகின இந்தக் காளிங்கனைப் பார்த்தா, இந்த வார்த்தைகளை உதிர்த்தீர்கள் பெண்டுகளா? எம் ஊர்லயும் நெல்லு வெளையும்படியாக நீர்ப் பாங்கு உண்டு பண்ணிக் கொண்டு, உம் வீட்டில் பெண் எடுப்பேன். இது நான் கும்பிடும் சர்வேஸ்வரன்ஆணை!’’ என்று சொல்லி சபதமேற்றுப் புறப்பட்டவர்தான்.

வைராக்கியத்தில் மிகுந்த மன்னவன். வீரதீரத்தில் சிறந்தவன். தன் குடி எட்டாயிரத்தையும் பவானி ஆற்றுப்படுகையில் இறக்கி விட்டான். இரவு பகல் என்றில்லை. பவானி ஆறு தொடங்கி, கொடுமுடி கூடல் வரை மொத்தம் ஏழு காத தூரம் ஆறேழு ஆண்டுகள் ஓயாத வேலை. ஊன் உறக்கம் இல்லை. நாட்டின் பயிர் விளைச்சல் கூட இரண்டாம் பட்சம்தான். ‘எல்லை எமதே!’ என்று புறப்பட்டுப் வந்த வேட்டுவர்களையும் போரில் சரித்தான். குறுநிலப் பிரபுக்களுக்குப் பாத்தியதையான நிலங்களைப் பொற்காசுகள் கொடுத்துப் பொதுப் பட்டயமாக்கினான். இப்படியாக உருவான வாய்க்காலுக்கு நீர்வரப் பெற பவானி ஆற்றின் குறுக்காக மண் அணையையும் மதகுகளையும் எழுப்பினான். தண்ணீர் திறக்க நாளும் குறித்து விட்டான்.

அந்த நாளில்தான், இப்படி ஒரு கூத்துக்காரி வந்து பிரச்சினை செய்துவிட்டாள்.

ஈராயிரம் வீரர்கள், 300 குதிரைகள், 100 யானைகள் அம்பாரி கட்டி பல்லாக்கு, உபய சாமரம், சுறுட்டி, வெள்ளைக் கொடை முதலான ஆயிரமாயிரம் பொருட்களுடன் காளிங்கராயருடைய வம்சமே தெற்கு திசை நோக்கி புறப்பட்டுவிட்டது. அவர்களை வழியனுப்பியது சில குடிகளே என்றாலும், அவர்களுடனே விசுவாசம் மாறாமல் கூடவே வந்தது பல குடிகள். கருட நாட்டுப் பெருவழியில் பூத்துறை நாட்டு எல்லை தாண்டி பரிவாரங்கள் நகர்ந்த வேளையில், இந்த ஊர்வலத்தை எதிர்த்த வாக்கில் ஒரு பெண் மயில்.

‘‘காளிங்கராய மகாராசரே! என்னை விட்டுப்போனால் ஆயிற்றா?’’ என்றபடி நின்றது சாட்சாத் அந்தக் கூத்துக்காரப் பெண்தான். அதே குறும்புப்பார்வை. மின்னல் வெட்டு. இப்போது அவளுடன் மற்ற கூத்துக்காரர்கள் யாருமில்லை.

‘‘அடப்பாவி, இப்போது என்னை மாய்மாலம் செய்ய வந்தாளோ?’’

ராஜாவின் பின்னால் அணிவகுத்த குடிகள் அரண்டு நின்ற வேளை. பின்புற பல்லக்கில் அமர்ந்திருந்த நஞ்சய்யகாளிங்கனுக்கு இருப்புக்கொள்ளவில்லை. பல்லக்கிலிருந்து இளவரசர் படபடத்துக் கீழிறங்கினார். அந்தக் கூத்துக்காரியை எட்டிப் பிடித்து, ‘‘ஆஹா.. தாமரைநாச்சி..நீ எங்கே போயிருந்தாய்?’’ எனக் கேட்டு நிற்க, ஆடிப்போனார் மன்னவர்.

‘‘தாமரைநாச்சியா? கூத்துக்காரியாக வந்து மணகரை வாசலில் நம்மிடமே நடித்தவள், இளவரசன் விரும்பிய பைங்கிளியா?’’ மன்னவருக்குச் சந்தேகத்தில் தலை சுற்றாத குறைதான்.

அதைப் போக்குவதுபோல், அவரருகே வந்தாள் கூத்துக்காரி. அவர் காலைத் தொட்டு வணங்கினாள்.

‘‘என்னை மன்னியுங்கள் மகாராஜா. எங்கள் சீமையில் உங்க நாட்டில் வெட்டுகிற வாய்க்காலைப் பற்றித்தான் நிறையப் பேர் பேசிக்கிறாங்க. ஆயிரந்தான் அடுத்த நாட்டுக்காரன் அசுர சாதனை புரிந்தாலும் அதை இளக்காரம் பேசாவிட்டால், இந்த நாட்டுக்காரனுக்குத் தூக்கம் பிடிக்காதே! அப்படித்தான் எங்க நாட்டுப் பொண்டுகள், ‘நீ பட்டத்து இளவரசியாகக்கூடிய நாட்டுல உன் காதலுக்காக ராஜா வாய்க்கால் வெட்டறாராம்ல? என்ன சுயநலம்? அந்தச் சுயநல நாட்டுக்கா போகப்போறே?’ன்னு என் காதுபடவே பேசிக்கிறாளுக. அதை அண்டை நாட்டவன் கல்வெட்டுல

பொறிச்சு கொடுமுடியில வைக்கப்போறதாகவும் சொன்னாங்க. இதை நான் எப்படி அனுமதிக்க முடியும்? என்னால புகுந்த வீட்டுக்கு ஒரு அவப்பெயரா? அதைச் சரித்திரம் பேசலாமா? அந்த ராசா மட்டுமல்ல, நான் கட்டிக்கப்போற இளவரசரும் சுயநலம் பார்க்கறவங்க இல்லே. அதை நிரூபிக்கிறேன்னு எங்க அரண்மனையிலயே சபதம் போட்டுட்டு வந்தேன். கூத்துக்காரி வேஷம் கட்டினேன். ஜெயிச்சும் காட்டினேன். நான் செய்தது தப்பா?’’ என்று கேட்டு நிற்க, காளிங்கரால் பேசக் கூட முடியவில்லை.

‘‘இவளல்லவோ என் மருமகள்!’’ என்று நாதழுதழுத்தார்.




‘‘வந்திரா! முடிவாய் நீ என்னதான் சொல்கிறாய்?’’ _சீறினார் பாவணன்.

தந்தையின் சீற்றம் தன்னைத் தகர்த்துவிட முடியாது என்று திமிரும் தேகம் வந்திராவுக்கு.

அவர் அவளிடம் அபிப்ராயம் கேட்கவில்லை! ஒப்புக்கொள் _ அடிபணி என்று கட்டளையிடுகிறார். அவளால் அதற்கு ஒப்ப முடியவில்லை.

‘‘தந்தையே! எனது முடிவை எப்போதோ சொல்லிவிட்டேன். அதில் எந்த மாற்றமுமில்லை. தயவுசெய்து என்னை நிர்ப்பந்திக்காதீர்கள்!’’

சொல்லிவிட்டு வீட்டு முற்றம் இறங்கினாள். மரத்தில் செடி கொடிகள் பின்னிபிணைந்திருக்க, அவற்றில் அணில்கள் தாவின.

அவள், கொலுசுகள் குலுங்கிக் குமுற ஓடிச் சென்று, பொய்கையை அடைந்தாள். தெளிந்த நீரில் அன்னங்கள் சிறகடித்து நீந்த, அந்தச் சுதந்திரம்கூட தனக்கில்லையே என்று மறுகினாள்.

எங்கிருந்தோ மகரந்தத்தைச் சுமந்து வந்த வண்ணத்துப்பூச்சிகள் ஒட்டி உறவாடியிருந்தன.

பொய்கையின் கரையோர மரத்தின் விழுதுகள் நீரோடு உறவாட, அதன்மேல் தாவிக்குதிக்கும் குரங்கினங்கள், பழத்திற்காக அலைமோதும் கிளிகள்.

தன்னைத்தவிர எல்லாமே சந்தோஷமாயிருப்பதாகத் தோன்றியது வந்திராவுக்கு.

அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது. ‘எனக்கேன் இந்தத் துயரம்?’

‘அரண்மனை ஊழியனின் மகளாகப் பிறந்ததுதான் பாவமா? எனக்கென்று ஒரு மனம் கூடாதா? விருப்பம் கூடதா!

வானம்பாடியாய் பாடித் திரிந்தவளின் துயருக்கெல்லாம் காரணம், பெருவளநல்லூர் கோட்ட மண்டலத்தின் இளவரசன்_ இளஞ்செயன். எங்கிருந்தோ வந்தான். எல்லை மீறி பிதற்றுகிறான். இன்பமே அவள் எனத் துரத்துகிறான்.

அவனும்கூட சோழ பரம்பரைதான். ஆனால், சுத்த வீரன் என்று சொல்ல முடியாது. அரண்மனை செல்வமும் செழிப்பும் அவனை இளம்பருவத்திலேயே பாழ்படுத்திவிட்டன. அவனுக்கென்று அந்தப்புர சுந்தரிகள் உண்டென்றும் பழிச்சொல் உண்டு.

அரண்மனை ஊழியர்களின் வீட்டில் பூப்பெய்திய பெண்கள் இருப்பின், அவர்களை அரண்மனை சேவகத்திற்கு அனுப்பவேண்டும். இது அரசகட்டளை! அவரவர்களின் தகுதி, வனப்பு, வசீகரம், வயது

அடிப்படையில் சேவகம் பிரித்துத் தரப்படும்.

வந்திராவுக்கு அப்படி வந்ததுதான் இளவரசியின் தோழி பதவி! ஊற்றத்தூர் கோட்டையின் ஒரே பெண் வாரிசு கயல்கன்னி. பெயருக்கு முற்றிலும் முரண்பட்ட தோற்றம்.

விழிக்கும் நோக்கிற்கும் மிகுந்த இடைவெளி. அரண்மனையில் பிறந்துவிட்ட புண்ணியத்தால் எல்லாம் அவளுக்கு இருக்கிறது; கிடைக்கிறது. இல்லாததும்கூட இருப்பது போன்ற தோற்றம் ஏற்படுத்தப்படுகிறது.

அரசி என்பதால் இயல்பிலேயே இறுமாப்பு! தோழிகள் என்றால் அடிமைகள்! அவள் சொன்னதைச் செய்யவேண்டும்.

வந்திராவுக்கு வெறுப்பு மேலிடும்.

ஒருசமயம் _ கயல்கன்னிக்கு சுயம்வரம்.

இளவரசி புலித்தோல் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க, தோழிகள் மயில் தோகையால் சாமரம் வீச _ சண்ட மேளங்களும் _ யாழும், குழலும், சங்கும் ஒலிக்க, புஜம் உயர்த்தி களத்தில் நாலா தேசத்து சக்ரவர்த்திகளின் எதிர்காலவாரிசுகள். இளவரசியின் கரம் பிடிக்க நெஞ்சுரம் காட்டிய அந்த இளஞ்சிங்கங்கள் அரண்மனை காளையை அடக்க முடியாமல் தோற்று ஓடினர்.

வில், அம்பு, யானைக்கல், கழுகு மரமேற்றம் என வெற்றி கொள்வார் யாருமில்லை.

அவர்களில் ஒருவனாக வந்தவன்தான் பெருவளநல்லூர் பேரரசின் இளவரசன் இளஞ்செயன். அவனது தந்தை படையெடுத்து வந்த பாண்டியர்களைப் புறமுதுகு காட்ட வைத்தவர். ஆனாலும் ஊற்றத்தூர் மன்னனின் படை பலத்தைப் பற்றிக் கொஞ்சம் பயமுண்டு. அவனிடமிருந்து தன் ராஜ்ஜியத்தைக் காத்துக்கொள்ள பலவழிகளிலும் சிந்தித்தான். அதில் ஒன்றுதான் மகனை ஊற்றத்தூர் இளவரசியின் சுயம்வரத்திற்கு அனுப்பியது.

ஆனால், இளஞ்செயன் நேர்எதிர். தன் வீரத்தையும் வலிமையையும் காட்டுவதெல்லாம் புள்ளிமான்களிடம்!

ஆனாலும் அவனுக்கு சுயம்வரத்தில் பங்குகொண்டு இளவரசியைக் கைபிடிக்க வேண்டும் என்கிற ஆசையும் இல்லை. ஆர்ப்பரிப்புமில்லை. எல்லாம் தந்தையின் பேராசை! கயல்கன்னியை மகன் மணந்தால், ஊற்றத்தூர் சாம்ராஜ்யம் தன் கைக்கு வரும் என்று அவர் கணக்கு போட்டிருந்தார்.

இளஞ்செயனுக்கோ மண்ணாசையைவிட பெண்ணாசையே பெரிது. கயல்கன்னி போன்ற அழகற்ற பெண்ணைத் துணையாகப் பெற்று துன்புறுவதைவிட, தேசமற்று தேசாந்திரியாய் அலைவதே மேல் என நினைத்தான். ஆயினும் தந்தையின் கட்டளையை மீறமுடியாது. சுயம்வரத்திற்குப் புறப்பட்டவன், பாதிவழி கடந்தபோது துணைக்கு வந்த சேவகர்களை அனுப்பிவிட்டு, புரவியின் கால் ஒடித்து கட்டுப்போட்டான். நொண்டிப் புரவியில் தாமதமாய் சுயம்வரப் பந்தலை அடைவதற்குள் எல்லாம் முடிந்து இளவரசி கயல்கன்னி திரும்பிக்கொண்டிருந்தாள்...

அவளுடன் வந்திராவும்.

இளஞ்செயனின் மனதில் பற்றியது மோகத்தீ. 'வந்திரா! வந்திரா! இவள் எனக்கு வேண்டும். யாரிவள்?'

விசாரித்தான்.

அன்றே பாவணனைக் கண்டு, ''உன் பெண் என் உயிரைக் கவர்ந்துவிட்டாள். அவளை எனக்கு மணம் முடித்துவை!'' என்று மிரட்டினான்.

‘வந்திரா _ சேவகி _ அரசியாகும் தகுதியில்லாதவள்’ என்று எத்தனை எடுத்துச் சொல்லியும்கூட அவன் கேட்கவில்லை. ‘‘இன்றே என்னுடன் அவளை அனுப்பாவிட்டால், சரியான தருணத்தில் இளவரசியைக் கொன்று பழியை உன் மகள்மேல் போடுவேன். ஆண்டியின் சொல் அம்பலம் ஏறாதென்பது உமக்குத் தெரியும் என நினைக்கிறேன். பெருவள நல்லூர் இளவரசன் என்ற அதிகாரத்தில் என்னால் எதையும் செய்யமுடியும். உம்மகளுக்காக நான் இதுவும் செய்வேன்’’ என்று கெக்கலித்தான் இளஞ்செயன்.

வந்திராவிடம் விபரம் சொல்ல, அவளோ ‘முடியவே முடியாது’ என்று மறுத்தாள். வெடித்தாள்.

‘‘வந்திரா! என் தவப்புதல்வியே! தாயே! உன் முன்னில் தர்க்கிக்கும் தெம்பு எனக்கில்லை. எது எப்படியாயினும் இந்தத் திருமணம் நடந்தாகவேண்டும். நீ மறுத்தால், இளவரசியின் உயிருக்கு ஆபத்து. அப்படிச் சம்பவித்தால் மறுகணமே நான் உயிர் துறப்பேன்! அது உறுதி!’’ கெஞ்சினார் பாவணன்.

நீண்ட யோசனைக்குப்பின் _

வந்திரா, ‘‘சரி தந்தையே! உங்கள் கட்டளையை ஏற்க நான் தயார். ஆனால் ஒரு நிபந்தனை!’’ என்று முறுக்கினாள்.

‘‘என்ன?’’

‘‘என்னைக் கைபிடிக்க _ நான் வைக்கும் போட்டிகளில் அவன் வெல்லவேண்டும்.’’

‘‘என்ன சொல்கிறாய் நீ, உனக்கென்ன பைத்தியமா? இளவரசனுக்குப் போட்டி வைக்க நீ யார்?’’

‘‘இளவரசி சுயம்வரம் நடத்தலாம். நான் கூடாதா?’’

‘‘கூடாது. அதற்கு உனக்கு யோக்கியதை இல்லை. வீண் பிதற்றல்கள் வேண்டாம். வேண்டாத ஆசைகள் வேண்டாம். என்ன சொல்கிறாய்?’’

_ இதுதான் வந்திரா இப்போது அவள் மனதைக் குடைந்து கொண்டிருக்கும் விஷயம். தந்தையின் கூற்றை அவளுக்கு ஜீரணிக்க முடியவில்லை. ‘எனக்கென்ன குறை? இளவரசியைவிட நான் அழகு. வேதம் கற்றவள். நாட்டியம், இசை தெரிந்தவள். அங்கங்களெல்லாம் அங்கங்கே சிறப்பாய் அமையப் பெற்றவள். ஏன் நான் மட்டும் போட்டி வைக்கக்கூடாதா?

என்னை மணமுடிப்பவன் வீரனாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படக்கூடாதா?’

தடாகத்தின் புல்வெளியில் அமர்ந்து தன் இயலாமையைத் தண்ணீரின்மேல் கற்களால் எறிய _

‘‘வந்திரா! வந்திரா!’’

மயக்கும் குரல் _ முதுகின்மேல் தாக்க, திரும்பிப் பார்த்தவளுக்கு அதிர்ச்சி.

புரவியின் மேல் அவன்! இளஞ்செயன். தடித்த புஜமும், விரித்த மார்பும், அரையில் செருகின வாளுமாய் அவன் தரையில் குதிக்க பூமியிலும் அதிர்ச்சி.

‘‘வந்தி! என் பேரழகே! உன்னைக் கண்டநாள் முதல் நான் எனை மறந்தேன்’’ பசப்புகிறான் என்று தெரிந்தது _ அவளுக்கும் புரிந்தது.

‘‘மன்னா! தாங்கள் வந்தது இளவரசியைக் கைபிடிக்கத்தானே?’’

‘‘இல்லை அன்பே! சென்ற பௌர்ணமி விழாவில் உன்னைக் காணும் பேறு பெற்றேன். அன்றே முடிவெடுத்தேன். எனக்கு நீதான் என்று. என் இதயமே! நான் உன் மேல் கொண்டுள்ள பாசத்தை

எப்படி வெளிப்படுத்தவேண்டும் சொல்! நீ என்ன சொன்னாலும் கேட்பேன்!’’

‘‘நான் என்ன சொன்னாலும் செய்வீர்களா?’’

‘‘நிச்சயமாக. என் தந்தையின் மேல் ஆணையாக!’’

வந்திராவின் உள்ளத்தில் திட்டம் ஓடியது. இளவரசியின் உயிரையும் காப்பாற்ற வேண்டும்; இவனைத் திருமணம் செய்துகொண்டு தன் வாழ்க்கை பாழாவதையும் தடுக்க வேண்டும். அதற்கு இவன் சாகவேண்டும்.

‘‘என்ன யோசனை வந்திரா? என்ன வேண்டும் சொல்?’’

‘‘அதோ அங்கே தெரிகிறதே அரசமரம்…’’

‘‘ஆமாம். அதற்கென்ன. அதை வேரோடு சாய்க்க வேண்டுமா?’’

‘‘இல்லை. அதன் கிளைகளில் ஊஞ்சல் கட்டி நாம் ஒன்றாக ஆடவேண்டும்?’’

‘‘ப்பூ… இவ்வளவுதானா… இதோ இப்போதே ஊஞ்சல் கட்டுகிறேன்.’’ என்று இளஞ்செயன் அரசமரத்தின்மேல் தாவினான்.

ஆலவிழுதில் ஊஞ்சல் சரி. அரசமரக் கிளையில் எப்படி? சாத்தியமா என அவன் யோசிக்கவில்லை. வந்திராவின் மேல் கொண்டிருந்த மோகத்தில் ஆவேசம் கண்களை மறைக்க, புத்தி மழுங்கி சேனமிட்ட புரவியாய் செயல்பட _ இமைக்கும் நேரத்தில் கிளை ஒடிந்தது… அவன் கீழே விழ…

அந்தக் கிளைக்குக் கீழே தரையில், பெரிய புதைசேறு இருப்பது அவளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்!
/